Registered as a NewsPaper. பக்கங்கள்: -பத்து

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ். நகரில் தனித்துவமான கலைநயம் மிக்க துல்லியமான அச்சுவேலைகளுக்கு

SP சிறந்த இடம்

சுரபி பதிப்பகம்


267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 வைகாசி 29 ஹிஜ்ரி 1427 ஜ அவ்வல் 15 (12.06.2006) திங்கட்கிழமை இதழ் 254

# படுகொலைகளை இனியும் பொறுக்கமுடியாது

# தாயகம் திரும்பியதும் தீர்க்கமான முடிவு!

## ஒஸ்லோவில் தமிழ்ச்செல்வன் பேட்டி



ஒஸ்லோ—

போராளிகளும், தமிழ் பொதுமக்களும் கொல்லப்படுவதை இனிமேலும் பொறுத்துக்கொண்டிருக்கமுடியாது.

இதுதொடர்பாக நேற்று நோர்வே அரசுக்கு திட்டவட்டமாக அறிவித்துள்ளோம். தாயகம் திரும்பியதும் தலைமைப்பீடத்துடன் கலந்தாலோசித்து தீர்க்கமான முடிவு ஒன்று எடுக்கப்படும் என, ஐரோப்பிய தொலைக்காட்சி ஒன்றுக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு பேட்டியளித்த அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்-

வங்காலைப் படுகொலைகள் குறித்தும், தளபதி மகேந்தி மீதான தாக்குதல் குறித்தும் நோர்வே அனுசரணையாளர்களிடம் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளோம்.

சமாதான காலத்தில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தளபதி லெப்.கேணல் மகேந்திக்கு பெருமளவு மக்கள் இறுதி அஞ்சலி


மன்னார்—

மன்னார்- வெள்ளாங்குளம் காட்டுப்பகுதியில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினரின் கிளைமோர்த் தாக்குதலில் வீரச்சாவடைந்த தளபதி லெப்.கேணல் மகேந்தியின் இறுதி வணக்க நிகழ்வு நேற்று பளையில் நடைபெற்றது.

பளை காவல்துறைப் பணிமனையில் நேற்றுக்காலை நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு அரசியல் துறைப் போராளி விடுதலை தலைமை தாங்கினார்.

முதலில் பொதுச்சுடரை மாவீரர் லெப். கேணல் மகேந்தியின் தந்தையார் ஏற்றினார்.

வித்துடலுக்கு மாவீரரின் துணைவியார் சுடரேற்றி (10 ஆம் பக்கம் பார்க்க)



## திருநெல்வேலியில் கிரனேட் வீச்சு ஒன்பது பொதுமக்கள் படுகாயம்!

யாழ்ப்பாணம்—

திருநெல்வேலிச் சந்தியில் நேற்றுக் காலை இனந்தெரியாதோர் நடத்திய கிரனேட் தாக்குதலில் 9 பொது மக்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது;-

நேற்றுக் காலை 10.15 மணியளவில் திருநெல்வேலிச் சந்திப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் அங்கு நின்ற படையினர் மீது கிரனேட் தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றனர்.

இதன்போது அந்தப்பகுதியில் நின்றிருந்த 9 பொதுமக்கள் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் உரும்பிராய் அரசடி வீதியைச் சேர்ந்த பிரதீபன் சிவசாந்தி (வயது 29), அல்லைப்பிட்டி மண்கும்பானைச் சேர்ந்த வைத்திலிங்கம் உதயகுமார் (வயது 34), கொக்குவில் தலையாழியைச் சேர்ந்த தளையசிங்கம் திவாகரன் (வயது 26), திருநெல்வேலி அம்மன் வீதியைச் சேர்ந்த இராசேந்திரம் பிரசாத் (வயது 13), பலாலி வீதி திருநெல்வேலியைச் சேர்ந்தவர்களான என்.வசந்தன் (வயது 23), முருகையா முருகமூர்த்தி (வயது 45), என்.ரவீந்திரராஜா (வயது 54), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பீ.சிவராசன் (வயது 23), மற்றும் (10 ஆம் பக்கம் பார்க்க)

# விறகுவெட்டச் சென்ற இருவர் சுட்டுக்கொலை

திருகோணமலை

திருகோணமலை - குரங்குப் பாஞ்சான்குளம் பகுதியில் காட்டுக்கு விறகு வெட்டச்சென்ற இருவர் இனந் தெரியாத நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. இது குறித்து மேலும் தெரிய வருவதாவது -

கிண்ணியா - குரங்குப்பாஞ்சான் குளத்துக்கும், உவர்வெட்டு என்ற இடத்துக்கும் இடையில் உள்ள காட்டுப்பகுதியில் விறகு வெட்டிக் கொண்டு திரும்பியோர்மீதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

பதுங்கியிருந்த படையினரே இந்தத் தாக்குதலை நடத்தியதாக கூறப்படுகிறது. எனினும், இதை மறுத்துள்ள படைத்தரப்பு புலிகளே இந்தத் தாக்குதல் மேற்கொண்டதாக கூறியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஈச்சந்தீவைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி - மதிவாணன் (வயது-42), பௌசல் நகரைச் சேர்ந்த முகமட் ரெமிஸ் (வயது-20) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இந்தச் சம்பவத்தில் பிச்சைத்தம்பி காசிம் (10 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய விமானப்படைத் தளபதி இன்று பதவியை பொறுப்பேற்பு

கொழும்பு

இலங்கை விமானப்படையின் புதிய தளபதியாக எயர் மார்ஷல் றொசான் குணதிலக இன்று உத்தியோகபூர்வமாக கடமையைப் பொறுப்பேற்கவுள்ளதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது.

50 வயதான எயர் மார்ஷல் றொசான் குணதிலக அமெரிக்காவின் அலயாமா வான் பல்கலைக்கழக பட்டதாரியாவார்.

28 வருடகாலம் விமானியாக கடமையாற்றி நீண்ட அனுபவம் பெற்ற இவர், இதற்கு முன்னர் விமானப்படைத் தலைமை அதிகாரியாக கடமையாற்றி வந்தார்.

விமானப்படை தளபதியாக நியமிக்கப்படவுள்ள எயர் மார்ஷல் றொசான் குணதிலக- முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஹரி குணதிலகவின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், இவரது சகோதரரான விங் (10 ஆம் பக்கம் பார்க்க)

# பாலைப்பாணியில் கிளைமோர்; இரண்டு பொதுமக்கள் பலி!

முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாந்தை கிழக்கு-பாலைப்பாணி என்ற இடத்தில் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பகுதிக்குள் நேற்றுக் காலை 6.30 மணியளவில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது இவர்கள் இருவர் மீதும் படையினரால் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

சம்பவ இடத்திலேயே இருவரும் உயிரிழந்தனர்.

மாங்குளம் சந்தியில் துணுக்காய் செல்லும் வீதியில் வன்னி (10 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் சூட்டில் மீசாலை இளைஞன் பலி

வவுனியா



வவுனியா - பண்டாரிக்குளத்தில் நேற்றுப் பிற்பகல் மீசாலையைச் சேர்ந்த இளைஞர் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுப் பிற்பகல் 2.25 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

வவுனியா - பண்டாரிகுளத்தில் இராணுவ சோதனைச் சாவடியில் நின்ற படையினர்மீது மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் துப்பாக்கிச் சூடு நடத்த முற்பட்டனர்.

அப்போது படையினர் பதில் தாக்குதல் மேற்கொண்டதில் (10 ஆம் பக்கம் பார்க்க)

# சினைப்பர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் பலி

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - வவுணதீவு இராணுவ முகாம்மீது நேற்று மாலை 5.40 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட சினைப்பர் தாக்குதலில் - முகாமில் உறங்கிக் கொண்டிருந்த சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்தே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாகவும், அண்மைக்காலமாக தொடர்ச்சியாக இந்த வவுணதீவு இராணுவ முகாம் எறிகணை மற்றும் சினைப்பர் தாக்குதல்களுக்கு உள்ளாகி வருவதாகவும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

நேற்று மாலை (10 ஆம் பக்கம் பார்க்க)

# உலகக் கிண்ணம் - 2006






## அசத்தினார்கள் சின்னவர்கள்



FIFA WORLD CUP
GERMANY
2006







டோர்ட்மொன்ட் —

சுவீடன் அணியில் மிகப் பிரபல்யமான வீரர்கள் பலர். அதோடு தரம் பத்துக்குள் அடங்கும் ஒரு அணியும் அது. அன்டர்ஸ் ஸ்வென்சன், இப்ராகிமோவிக், லார்சன் போன்றோர் உன்னத வீரர்கள். இத்தகைய பெருமைகள் எல்லாம் தென்அமெரிக்க நாடான ரினிடாட்-டுபாக்கோவுக்கு இல்லை.

இந்த நாட்டின் பெயரைச் சொன்னால் பிறைன் லாரா நினைவுக்கு வருவார் அல்லது கிரிக்கெட் நினைவுக்கு வரும்.

ஆனால், ஐரோப்பிய நட்சத்திரங்கள் அடங்கிய சுவீடனை அலைக்கழித்திருக்கிறார்கள் இவர்கள். இல்லாவிட்டால் கோல்கள் எதுவும் பெறப்படாமலே சமநிலையில் முடிவடைந்த ஆட்டமாக இது இருந்திருக்க முடியாது. சிறப்பாக மார்கஸ் ஆல்பக் மற்றும் இப்ராகிமோவிக் ஆகியோரை எதிர்கொண்டு தடுத்ததையே டிரினிடாட்-டுபாக்கோ அணியைக் காப்பாற்றியது என்று சொல்லவேண்டும்.

சுவீடன் அணி எவ்வித அச்சமும் இன்றி எதிரணியை நெருக்கி கோல் போடும் பாணியில் சிறப்பாகவே விளையாடியது. ஆனால், ரினிடாட்-டுபாக்கோ தம்மையும் பாதுகாத்துக்கொண்டு எட்டநின்று கோல்போட முயற்சித்தது.

இறுதியில் ஆட்டம் நிறைவுபெற்ற போது இரண்டு அணிகளின் எந்த வியூகமும் பரஸ்பரம் ஊடுருவ முடியவில்லை என்பது புரிந்தது. அதனால் தான் ஆட்டம் 0 - 0 என்று முடிவடைந்துள்ளது.

என்றாலும் தார்மீக வெற்றி என்று ஒன்று ஏற்றுக் கொள்ளப்படுமானால் கரிபியன் தீவான ரினிடாட்-டுபாக்கோவுக்கு அதனைக் கொடுக்கலாம். ஏனெனில் மலையோடு மோதினார்கள், ஆனால் நொருங்கவில்லை.


சுவீடன் தொடர்ச்சியாக உலகக் கிண்ணப்போட்டிகளில் ஏழாவது முறையாக தொடக்க ஆட்டத்திலேயே வெற்றிபெற இயலாத அணியாயிற்று.

ரினிடாட்-டுபாக்கோ அணியின் அவெரி ஜோன் 2006 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப்போட்டிகளில் முதல் **RED CARD** காட்டப்பட்டு வெளியேறும் சாதனையைத் தனதாக்கிக்கொண்டார். இவரது சார்பான சாக்கா ஹிஸ்லொப் தனது 37 வருடம் 108 நாட்கள் கொண்ட வயதுடன் 2006 உலகக் கிண்ணப் போட்டியின் அதிமூத்த உறுப்பினர் என்ற பெருமையைப் பெறுகிறார்.

டோர்ட்மன்ட் ஸ்ரேடியத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியைக் கண்டு களித்தவர்கள் அறுபத்தையாயிரம் பேர்.

## வெற்றி ஆச்சரியமல்ல





ஹம்பேர்க் —

ஹம்பேர்க் **FIFA** மைதானத்தில் கூடியிருந்த ஐம்பதாயிரம் பேரும் தமக்குப் பரிச்சயமான தரவரிசையில் பத்துக்குள் அடங்கும் ஆர்ஜென்ரீனா இலகுவாக மேற்கு ஆபிரிக்க நாடான ஐவரிகோஸ்ட் மீது ஆதிக்கத்தை நிலைநாட்டும் என்றே கருதியிருப்பார்கள். ஆனால், ஆர்ஜென்ரீனாவின் உலகக்கிண்ண அனுபவங்களே 2:1 என்று ஐவரிகோஸ்ட்டை வீழ்த்த உதவியது.

ஆட்டத்தின் ஆரம்பக் கட்டங்களில் ஐவரிகோஸ்ட், ஆர்ஜென்ரீன அணிக்கு அழுத்தம் கொடுத்து விளையாடியது. சிறப்பாக டிடியர் டிரகோபா பெற்றுக்கொடுத்த பல சந்தர்ப்பங்கள்



முறையாக மற்றவர்களால் முடிக்கத்தெரியாமற் போனமை சந்தர்ப்பங்களைக் கெடுத்துவிட்டது. முழு ஆட்டத்திலும் **Finishing** பற்றிய குறைபாடு ஐவரிகோஸ்ட் அணி பற்றிப் பெரிதாகப் பேசப் படுகின்றது.

ஆனால் இதற்கு மாறாக ஆர்ஜென்ரீனா தன்னொழுங்கு நிறைந்ததாக இருந்ததால் தனித்துவமாகத் தெரிந்தது.

இருந்தும் ஐவரிகோஸ்ட் கோல் காப்பாளர் இந்த ஆட்டத்தில் இவர்கள் பக்கம் தனித்துவமாகத் தெரிந்தார்.

இரண்டு அணிகளுமே பல சந்தர்ப்பங்களைத் தவறவிட்டாலும் ஆர்ஜென்ரீனா இரண்டு தடவையும் ஐவரிகோஸ்ட் ஒரு தரமும் வலையைத் தொட்டன. 2:1 என ஆர்ஜென்ரீனா வெற்றிவாகை சூடியது.

ஆஜென்ரீனா முதல் அரை நேரத்தில் 24ஆவது நிமிடத்தில் கிரெஸ்போ மூலமும், 38ஆவது நிமிடத்தில் சிவியோலா மூலமும் இரண்டு கோல்களைப் பெற, ஐவரிகோஸ்ட் 82ஆவது நிமிடத்தில் ட்ரொக்பா மூலம் ஒரு கோலைப் பெற்றது.

இந்த சி பிரிவு ஆட்டத்தின் மூலம் நான்கா



வது முறையாக ஆஜென்ரீனா உலகக்கிண்ணச் சுற்றுப்போட்டியின் முதலாவது ஆட்டத்திலேயே வெற்றி கண்டிருக்கிறது.

ஐவரிகோஸ்ட் தனது முதலாவது பிரவேசத்திலேயே தோல்வி கண்டிருக்கிறது. இன்னொரு செய்தி உலகக்கிண்ணப் போட்டியொன்றில் சகோதரர்கள் இருவர் ஒன்றாக விளையாடுவது இது 21ஆவது முறை. அவர்கள் ஐவரிகோஸ்ட் அணியின் கோலோ டூரே மற்றும் யாயா டூரே.

## ஹொலன்டுக்கு ஆறுதல் வெற்றி





லீப்ஸிக் —

ஜேர்மனியில் நடைபெற்றுவரும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் ஹொலன்ட் அணி 1:0 என்ற கோல் அடிப்படையில் சேர்பியா மொன்ரநிக்ரோ அணியைத் தோற்கடித்தது.




லீப்ஸிக் நகரில் இலங்கை நேரப்படி நேற்று மாலை 6.30 மணிக்கு ஆரம்ப போட்டியின் முதலாவது நிமிடத்திலேயே ஹொலன்ட் வீரர் ரொபென் தலையால் முட்டி பந்தை அடித்தார். ஆனால், சேர்பியா - மொன்ரநிக்ரோ அணி கோல் காப்பாளர் அதை தடுத்துவிட கோல் வாய்ப்பு நழுவியது.

போட்டி தொடங்கி 17ஆவது நிமிடத்தில் ஹொலன்ட் வீரர் அர்ஜன் ரொபென் முதலாவது கோலை அடித்து அணியை முன்னிலைப் படுத்தினார்.

இதன்பின்னர் இரு அணியினரும் கடும் முயற்சிகளை எடுத்தபோதும் முதல் பாதி ஆட்டமுடிவரை எந்த கோலையும் போட முடியவில்லை.

இரண்டாவது பாதியாட்டத்திலும் இரு அணிகளும் இறுக்கமாகவே ஆட்டத்தைத் தொடர்ந்தன. இதனால் இரு அணிகளுக்குமே கோல் அடிக்கும் வாய்ப்பு கிடைக்காது போனது.

இந்தநிலையில் ஹொலன்ட் அணி 1:0 அணி என்ற அடிப்படையில் சேர்பியா-மொன்ர






இதன்பின்னர் ஹொலன்ட் வீரர்கள் கோல் அடிப்பதற்கு பெரும் முயற்சிகளை எடுத்தபோதும் - 5ஆவது, 9ஆவது நிமிடங்களில் எதிரணியின் தற்காப்பு ஆட்டத்தால் தடுக்கப்பட்டது.

நிக்ரோ அணியைத் தோற்கடித்து சி பிரிவில் 3 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டது.

இந்த ஆட்டத்தைக் காண 37216 ரசிகர்கள் மைதானத்தில் குழுமியமை குறிப்பிடத்தக்கது.

# நோர்வேயின் 5 கேள்விகளுக்கும் மகிந்த சில தினங்களுக்குள் பதில்



கொழும்பு —

போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக நோர்வேயின் ஐந்து கேள்விகளுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சில தினங்களுக்குள் பதில் அளிக்கவிருப்பதாக ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவித்தன.

போர்நிறுத்த கண்காணிப்பாளர் பிரச்சினை தொடர்பாக ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது விடுதலைப் புலிகளும் - அரச தரப்பினரும் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட மறுத்ததையடுத்து - நோர்வே, கண்காணிப்பாளர்கள் குறித்து முன்வைக்கப்பட்ட 5 கேள்விகள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரச உயர் மட்டத்தினருடன் கலந்துரையாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஒஸ்லோ சென்ற அரச குழு நாடு திரும்பியவுடன் அவர்களுடன் முக்கிய கலந்துரையாடல் மேற்கொள்ளவிருப்பதாகவும், கேள்விகள் தொடர்பாக ஜனாதிபதி தொடர்ந்து ஈடுபாடு காட்டிவருவதுடன், போர்நிறுத்த உடன்படிக்கையைப் பேணுவதுடன் சமாதான முயற்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

சமாதான முன்னெடுப்புக்களில் அரசு நம்பிக்கை இழக்கவில்லை எனவும், முட்டுக்கட்டைகளை விரைவில் நிவர்த்தி செய்து கொண்டு பேச்சுக்களை தொடர்ந்து முன்னெடுப்பதிலும் அக்கறை எடுத்துவருவதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

# இராணுவத் தளபதி மீதான தாக்குதல் குற்றவாளி பத்து நாளில் பிடிபடுவார்!

## என்கிறார் பொலிஸ்மா அதிபர்



கொழும்பு —

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகாவின் கொலை முயற்சியில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை பத்து நாட்களுக்குள் கைது செய்ய முடியுமென பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொம்பனித் தெருவில் இராணுவத் தலைமையகத்தில் வைத்து இராணுவத் தளபதி மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் விசேட பொலிஸ் குழுக்கள், ரகசியப் பொலிஸார் ஆகியோர் விசாரணைகளை மேற்கொள்வதுடன் - பலர் கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தரம் ஒன்று மாணவர் அனுமதிக்கு 30 ஆம் திகதிவரை விண்ணப்பம்!

கொழும்பு —

தேசிய பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்க்கவுள்ளோர் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டுமெனவும், இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் அடுத்த மாத இறுதியில் நடத்தப்படுமெனவும் பாடசாலை நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் தர்மசேன தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சையில் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவோரின் பெயர்ப்பட்டியல் அந்தந்த பாடசாலைகளில் செப்ரெம்பர் 15 ஆம் திகதி முதல் பார்வைக்கு வைக்கப்படும்.

இதில் பெயர் குறிப்பிடப்படாதோர் செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் மேன்முறையீடு செய்யவேண்டும். ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேன்முறையீடு செய்வோருக்கு மீண்டுமொரு நேர்முகப் பரீட்சை நடத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# முகாமைத்துவ உதவியாளர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர்

## மாகாண கல்வியமைச்சு செயலாளர்

திருகோணமலை —

வடக்கு - கிழக்கு கல்வியமைச்சின் கீழ் இயங்கிவரும் நிறுவனங்களில் 1999 ஆம் ஆண்டு முதல் முகாமைத்துவ உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளதாக மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் தெரிவித்தார்.


அரசாங்கத்தின் முக்கிய பணிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு தற்போது வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகள், வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் கோட்டக்கல்வி அலுவலகங்கள் என்பவற்றில் முகாமைத்துவ உதவியாளர்களாகக் கடமையாற்றும் பட்டதாரிகளே ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது.

இதேவேளை, குறிப்பிட்ட முகாமைத்துவ உதவியாளர்கள் ஆசிரிய நியமனம் பெறுவதற்கான தமது விருப்பத்தை எழுத்து மூலம் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு தெரியப்படுத்தவேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளனர். இவ்வாறு நியமிக்கப்படும் பட்டதாரிகள் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கு மட்டுமே நியமிக்கப்படுவரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்கு மக்கள் புலனாய்வாளராக மாறவேண்டும்

## ஜே.வி.பி தெரிவிப்பு



கொழும்பு —

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க மக்கள் அனைவரும் புலனாய்வாளர்களாக மாறவேண்டும் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்கந்த தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் எங்கு பயங்கரவாதம் தலைதூக்குகிறது என்பது தொடர்பாக மக்கள் அனைவரும் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும். விடுதலைப் புலிகளுக்கு தேவையான சமாதானம் எமக்குத் தேவையில்லை.

இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி மூலமே தீர்வு காணப்படவேண்டும் என்பதே மகிந்த சிந்தனைக் கொள்கைத்திட்டமாகும். இதற்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது. எனவே, அதனை எவராலும் மீறமுடியாது.

தமிழ் மக்களின் உரிமைகளுக்கு நாங்கள் மதிப்பளிக்கிறோம். ஆனால், ஈழத்தை எதிர்க்கிறோம். புலிகள் ஈழத்தைப் பெறுவதற்காகவே போராடி வருகிறார்கள். பேச்சுக்கு புலிகள் வந்தது ஈழத்தை நோக்கித்தான் என்பது உறுதி. ஈழத்துக்காகவே புலிகள் அமைப்பு உருவாக்கப்பட்டது என்பதை நாம் அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

எமது நாட்டை முப்படைகளே பாதுகாத்து வருகின்றன. எனவே, பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு முப்படைகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். எனவே, பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு மக்கள் அனைவரும் புலனாய்வாளர்களாக மாறவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறுவர் துஷ்பிரயோகத்தில் இலங்கை பிரபல்யம்!

## அமெரிக்கா அறிக்கை

கொழும்பு —

உல்லாசப் பயணிகள், சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஈடுபடுத்துவதில் பிரபல்யம் பெற்ற நாடாக இலங்கை திகழ்கிறது என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை தொடர்பாக இந்த வருடம் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனா, தென்கொரியா, மத்திய கிழக்கு நாடுகளுக்கு இலங்கையிலிருந்து சிறுவர்கள், பெண்கள் வீட்டு வேலைகளுக்காக அனுப்பப்படுவோர் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்படுகின்றனர்.

இந்தச் செயற்பாடுகள் வியாபார நடவடிக்கையில் மேற்கொள்ளப்படுகிறது எனவும், இலங்கையின் கரையோரப் பகுதிகளிலேயே அதிகளவில் இத்தகைய சம்பவங்கள் நடைபெற்று வருவதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமைச்சரவை மாற்றம் 20 ஆம் திகதிக்குப் பின்!

கொழும்பு

அமைச்சரவை மறுசீரமைப்பு நடவடிக்கைகளை எதிர்வரும் 20 ஆம் திகதிக்குப் பின்னர் மேற்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய ஜனாதிபதி மகிந்தவின் ஆலோசகர்கள் நால்வரும், செயலாளர் லலித் வீரதுங்கவும் இந்த அமைச்சரவை மறுசீரமைப்புக்கான நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

அமைச்சுக்களை வேறுபடுத்தல், நிர்வாகத்தை இலகுபடுத்தல் மற்றும் சட்ட நடவடிக்கைகள் என்பன பற்றி இந்தக் குழு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

போராசிரியர் கமல் கருணாநாயக்க, தம்மிக அமரசிங்க உட்பட மகிந்தவின் 4 ஆலோசகர்கள் அமைச்சரவை மறுசீரமைப்பு பற்றிய நடவடிக்கைகளை பூர்த்தி செய்த பின்னர், நல்லநேரத்தில் அதனை செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அலரி மாளிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

# எல்லைக் கிராம மக்களுக்கு ஆயுதப் பயற்சி வழங்கவேண்டும்

## ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை

கொழும்பு —

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள எல்லைக் கிராம சிங்கள மக்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கி ஆயுதங்களை வழங்க வேண்டுமென ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் மத்தும பண்டார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

எல்லைக் கிராமங்களிலுள்ள சிங்கள மக்களுக்கு போதிய பாதுகாப்பு இல்லை. அவர்கள் குடியிருக்கும் கிராமங்களுக்குள் பயங்கரவாதிகள் புகுந்து படுகொலை செய்கின்றனர். அந்தப் பகுதி கிராமங்களில் வாழும் மக்கள் தமது தொழில் நடவடிக்கைகளுக்காக வெளியே செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

அவர்கள் மாலை வேளை தமது வயல் நிலங்களில் நின்று வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த அவல நிலை குறித்து அரசாங்கம் போதியளவு கவனம் செலுத்தவில்லை. எனவே, எல்லைக் கிராமங்களிலுள்ள மக்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கவேண்டும்.

அவ்வாறு ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படவேண்டும்.

அத்துடன், எல்லைக்கிராம வீதிகளில் தடுப்பு முகாம்களும் அமைக்கப்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரச வங்கி ஊழியர்களின் சம்பளம் அதிகரிப்பு

கொழும்பு —

அரசாங்க வங்கிகளில் கடமையாற்றும் ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சம்பள உயர்வுக்கான அங்கீகாரத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அரசாங்க வங்கிகளின் தலைவர்கள் அலரிமாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பேச்சுவார்த்தையில் இலங்கை வங்கி, மக்கள்வங்கி, அரச முதலீட்டு வங்கி ஆகியவற்றின் தலைவர்கள் கலந்துகொண்டார்கள்.

# எண்ணெய் அகழ்வு பணிக்கு இந்தியா, சீனாவுக்கு அனுமதி

## அமைச்சர் பௌசி தெரிவிப்பு

கொழும்பு —

இலங்கையில் எண்ணெய் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. கேள்வி கோரல் முறைக்கு புறம்பாக நேரடியாக அகழ்வு நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்படும் என பெற்றோலியத்துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

கடற்பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் எண்ணெய் படிமங்கள் ஏழு இடங்களில் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த எண்ணெய் படிமங்களை அகழ்வதற்கு இந்தியாவுக்கும், சீனாவுக்கும் அனுமதி வழங்கிய பின்னர் மிகுதியாக உள்ள பகுதிகளை அகழ்வதற்கு கேள்வி கோரப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மேலும் 400 மில்லியன் ரூபா வற்வரி மோசடி அம்பலம்!

கொழும்பு —

குற்றப்புலனாய்வுப் பிரிவின் தகவலின்படி மேலும் 400 மில்லியன் ரூபா வற்மோசடி இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் சிசிர மெண்டிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்த மோசடியில் தொடர்புடைய சந்தேக நபர்கள் விரைவில் கைது செய்யப்படுவர். ஜீ.எஸ்.ரி வரி மோசடி தொடர்பாகவும் பல தகவல்கள் கிடைத்துள்ளன. வற்வரி விசாரணைகளின் போதே இதுதொடர்பான தகவல் கிடைத்தது. இது குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

வற்வரி மோசடி குறித்து விசாரிப்பதற்காக விசேட விசாரணைக் குழுக்கள் தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. சந்தேகநபர்கள் பலரை கைது செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊர்காவற்துறை வைத்தியசாலைக்கு வைத்தியரை நியமிக்கக் கோரிக்கை!

ஊர்காவற்துறை ——

ஊர்காவற்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு நிரந்தரமான வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு வைத்தியசாலை அபிவிருத்திச் சபை வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார பிரதிப்பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அபிவிருத்திச் சபை மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஊர்காவற்துறை மாவட்ட வைத்தியசாலையில் நிரந்தரமான மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவர் இல்லை என வடக்கு - கிழக்கு மாகாண பிரதி சுகாதாரப் பணிப்பாளரின் கவனத்துக்கு வைத்திய சாலை அபிவிருத்திச்சபை பல தடவை தெரிவித்தும் - இதுவரை வைத்தியர் நியமிக்கப்படவில்லை.

இந்த வைத்தியசாலை நிர்வாகத்துக்குப் பொறுப்பாக பல்வைத்திய நிபுணர் கடமையாற்றுகிறார். உதவி வைத்திய அதிகாரி ஒருவர் மட்டும் ஊர்காவற்துறைக்கும், வேலணைக்குமாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் அவசர நோயாளிகள் எவ்வாறு சிகிச்சை பெறமுடியாத நிலையிலுள்ளனர்.

இந்த வைத்தியசாலைக்கு தாதிகள், பணியாளர்கள், சிற்றூழியர்கள், சுத்திக ரிப்பாளர்கள் எனப் பலரை நியமித்தாலும் - வைத்திய அதிகாரி, உதவி வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டாலே வைத்தியசாலைப் பணிகள் சீராக நடைபெறும்.

எனவே இதனை வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார பிரதி பணிப்பாளர் நிவர்த்தி செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊழியர் நலன்புரிச்சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு

மானிப்பாய் ——

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் ஊழியர் நலன் புரிச் சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பண்டத்தரிப்பு உப அலுவலக பொறுப்பதிகாரி ஞா.தேவச்சந்திரன் தலைவராகவும், சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் எஸ்.ஞான சூரியன் உபதலைவராகவும், கௌரி விக்னேஸ்வரன் செயலாளராகவும், ஆனைக்கோட்டை உப அலுவலக முகாமைத்துவ உதவியாளர் எஸ். சந்திரமௌலி பொருளாளராகவும் தெரிவுசெய்ய ப்பட்டனர்.

தொடர்ந்து சங்கத்தின் உறுப்பினர்களாக - எஸ்.கிருபானுஜன், எஸ்.இரட்ணராஜா, திருமதி த.கிருபைராஜா எஸ்.டொறத்தி, என். காணிக்கைநாதன், திருமதி த.மதிமுருகன் எம்.வி.குணாளன் எஸ். கிருஷ்ணசாமி, சாரதா, எஸ். இராசலட்சுமி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்தச் சங்கத்தின் போஷகராக சபையின் செயலாளர் எம்.ஜே.சாந்தசீலன் தெரிவு செய்யப்பட்டர். (100)

## கணினி நூல்கள் அன்பளிப்பு

கோண்டாவில் ——

கோண்டாவிலில் அமைந்துள்ள சி.பி கணினி நிறுவனத்தின் முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் கே.ஆர்.சுகுமார் கோண்டாவில் சி.சி தமிழ் கலவன் பாடசாலை, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், இணுவில் மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி போன்ற பாடசாலைகளுக்கு ஒரு தொகுதி கணினி நூல்கள், பாட நூல்களை அன்பளிப்பாக பாடசாலை அதிபர்களிடம் வழங்கியுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

## விபரங்கள் திரட்டல்

சங்கானை ——

மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் நிமித்தம் சென்று வேலை செய்யும் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ளவர்களின் விபரங்களைப் பிரதேச செயலகம் திரட்டி வருகிறது.

இந்த விபரத் திரட்டுக்கான படிவங்களைத் தத்தமது கிராம அலுவலரிடம் பெற்று, அதனைப் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

## குருபூசை

யாழ்ப்பாணம் ——

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வழமைபோல் இன்று காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி தேவஸ்தானத்தில் ஆலய பூசையைத் தொடர்ந்து திருஞான சம்பந்தர் குருபூசையும் அவர் அருளிய அற்புதத் திருப்பதிக முற்றோதலும் இடம்பெறும்.

மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, சிவகுருநாதன் ஒழுங்கை, தோப்பு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்திலும் திருஞான சம்பந்தர் குரு பூசையும், திருமுறைப் பாடல்கள் பாராயணமும் இடம்பெறும்.


ராஜா யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா ஆரியா மற்றும் பலர் நடித்த



பட்டியல்

(புதிய வெளியீடு)

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

மனோகரா யாழ்ப்பாணம்

இன்று முதல் புதிய வெளியிடாக

ஜீவன், சோனியா அகர்வால், விவேக், அப்பாஸ், மாளவிகா மற்றும் பலர் நடித்த

திருட்டுப் பயலே

காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை

சூரியா, அசின், பிரகாஷ்ராஜ் நடித்த

கஜினி

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

1வது அகவையில் சி.பி


COMPUTER ACADEMY CB SRI LANKA

1வது அகவையில் இன்று (12-06-2006) கால்பதிக்கும் கோண்டாவில் சி.பி கணினி நிறுவனம் மேலும் விரிந்து பரந்து கணினிக் கல்விப் பணியாற்ற வாழ்த்துகிறோம்.

மாணவர்கள்

(2301)


# 20 ஆம் ஆண்டு நினைவலைகள்



சதாசிவம் தமிழரசுவரன்

(அர்ச்சுனா)

12.06.2006 திங்கட்கிழமை

அன்னையிடம் 04.04.1960

அண்ணையிடம் 20.10.1983

அன்பரிடம் 12.06.1986

திருப்புகழ்

சுதந்திரம் என்ற தொடராலே  
சஞ்சலம் துஞ்சித் திரியாமல்  
கந்தனென்றுனை ஏந்நாளும்  
கண்டுகொண்டன்பை மறப்பேனோ  
தம்பியின் நல்மனம் புரிவோனே  
சங்கரன் பங்கிற் சிவபாலா  
வந்திங்கு புரியும் கொடுமைகண்ட கதிர்வேலா  
வந்த வழி யோடவைக்க அருள்வாய் பெருமாளே!

யாழ்ப்பாணம். குடும்பம்

[2299]

# அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை குறித்து

# கண்காணிப்புக்குழுவிடம் புலிகள் முறையீடு



யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப் படும் சம்பவங்கள் குறித்து யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் சி.இளம்பரிதி போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவில் முறைப் பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக அரசியல்துறைப் பொறுப்பாளர் செய்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

ஜெனிவாப் பேச்சுக்களின் பின் னர் யாழ்.குடாநாட்டில் மட்டும் 74 இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் படையினராலும் அவர்களு டன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுவான ஈ.பி.டி.பியினராலும் படு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களைவிட குடாநாட்டைச் சேர்ந்த பல இளைஞர்கள், யுவதிகள், இந்துமத குருமார்கள் உட்பட முப்பது பேர் காணாமல் போயுள்ளனர். இதன் பின்னணியில் படையினரும், ஈ.பி. டி.பியினரும் உள்ளனர்.

கடந்த 6 ஆம்,7ஆம்,8ஆம் திகதி களில் பொதுமக்கள் கொடுத்த தகவ லின்படி கோப்பாய் - கைதடி வீதியில் கோப்பாய் பாலத்துக்கு அண்மை யில், வீதியில் இருந்து சுமார் 100 மீற்றருக்குட்பட்ட தரவைப் பகுதி யிலிருந்து காணாமல் போன இந்து மதகுருவான வைத்தீஸ்வரசர்மா வெங்கடகிருஸ்ணசர்மா மற்றும் பரணீதரன் ஆகியோரது சடலங்கள் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டன.

சடலங்கள் புதைக்கப்பட்ட இடத்தி லிருந்து ஒரு புறத்தே சுமார் 200 மீற்றர் தொலைவிலும்,மறுபுறத்தே சுமார் 300 மீற்றர் தொலைவிலும் இராணுவ முகாம்கள் அமைந்துள் ளன. இத்தகைய பகுதியிலிருந்து இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்றே காணாமல் போன ஏனையோரும் கொலை செய் யப்பட்டு இராணுவ முகாம்களுக்கு அண்மையிலுள்ள பிரதேசங்களில் புதைக்கப்பட்டிருக்கலாம் என நாம் கருதுகின்றோம்.

எனவே, இந்தப் படுகொலை களை படையினரும் அவர்களுடன் சேர்ந்து இயங்கும் துணை ஆயுதக் குழுவான ஈ.பி.டி.பியினருமே செய்த னர் என்பது உறுதிப்படுத்தப்படும் போதும் - போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவினர் இவற்றை யார் செய்தார்கள் என்பதை வெளிப் படுத்தாமல் மௌனம் சாதிப்பது எமக் குப் பெரும் கவலையை அளிக்கிறது.

இந்தப் படுகொலைகள் வெளிக் கொண்டுவரப்பட வேண்டும் என் பதில் முன்னின்று உழைத்த கோப் பாய் பகுதி கிராம அலுவலர் யோசப் ரட்ணராஜா சுட்டு படுகாயப்படுத்தப் பட்டுள்ளார்.

மனித சமுதாயத்தையே தலை குனிய வைக்கும் அரசின் இத்தகைய கொடூரமான செயல்கள் வன்மை யாகக் கண்டிக்கப்பட வேண்டிய வையே. அதேநேரத்தில் பொது மக்கள் படுகொலை செய்யப்படுவது வெளிப்படுத்த வேண்டுமென்ற மனித நேயம்மிக்கவர்கள் மீதான படு கொலை முயற்சிகளை - படையின ரின் போர்நிறுத்த மீறல்களாகவே நாம் கருதுகிறோம். மனித உரிமை சம்பந்தமானவர்களும், நீதித்துறையி னரும் இவ்வாறான சம்பவங்கள் குறி த்து விழிப்புடன் செயற்படவேண்டு மென நாம் கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிலையான திட்டங்களை நடைமுறைப்படுத்த அரச சார்பற்ற நிறுவனங்கள் தயக்கம்

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் யுத்தம் மற் றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடாநாட்டில் பணியாற்றி வரும் பெரும்பாலான சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் நிலை யான செயற்திட்டங்களை நடை முறைப்படுத்தாது - பொருட்களை யும், உபகரணங்களையும் வழங்கு வதிலேயே கூடிய கவனம் செலுத்தி வருவதாக விசனம் தெரிவிக்கப் படுகிறது.

சுனாமிக்குப் பின்னர் இதுவரை இத்தகைய நிறுவனங்கள் மக்களின் பயன்பாட்டுக்கு அப்பாற்பட்ட பொருட் களையும், உபகரணங்களையுமே இடையிடையே வழங்கி வருகின் றன.

இந்த உபகரணத் தொகுதி களைப் பெற்ற மக்கள் அவற்றை முறையாகப் பயன்படுத்தாமல் வீடு களில் முடக்கி வைத்துள்ளனர்.

எனவே,இந்த நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பயன் பெறவும், வருமானம் ஈட்டக் கூடிய வகையிலும் தமது செயற்திட்டங் களை நடைமுறைப்படுத்த வேண்டு மென பல தடவைகள் வலியுறுத்தப் பட்டது. எனினும், எந்தவொரு நிறு வனமும் அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடத் தயாராக இல்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு கத்தி, கோடரி, பீங்கான் மற்றும் சைக்கிள் போன்றவற்றை வழங்கி வரும் இந்த நிறுவனங்கள் - தொடர்ந்தும் அவ ற்றை வழங்குவதிலேயே ஆர்வம் காட்டி வருகின்றன எனத் தெரிவிக்கப் படுகிறது.

## சேவைக்கால கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை!

யாழ்ப்பாணம் —

இலங்கை போக்குவரத்து சபை யின் யாழ்.டிப்போவில் பணியாற்றி ஓய்வு பெற்ற 51 பேருக்கு இதுவரை சேவைக் காலக் கொடுப்பனவுகள் வழங்கப்பட.வில்லை எனத் தெரி விக்கப்படுகிறது.

கடந்த டிசெம்பர் மாதத்தின் பின் னர் ஓய்வு பெற்ற 51 பேருக்கும் இல ங்கை போக்குவரத்துச் சபை 19.6 மில்லியன் ரூபாவை சேவைக்காலக் கொடுப்பனவாக வழங்கவேண்டும்.

எனினும், இதுவரை கொடுப் பனவுகள் எதுவும் வழங்கப்பட வில்லை.

பணியாளர் கொடுப்பனவுகளை வழங்கும்படி இலங்கை போக்கு வரத்துச் சபைக்கு பலமுறை எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்ட போதும் - இதுவரை எந்தவித நடவடிக்கை யையும் எடுக்கவில்லை என வட பிராந்தியபோக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த வருடமும் பல ஊழியர்கள் ஓய்வு பெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது.

## அச்சுவேலி குடிநீர் தொட்டிகளுக்கு நீர் நிரப்ப 200 இலட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம் —


அச்சுவேலி உபஅலுவலகப் பகுதி யில் நிறுவப்பட்டுள்ள குடிநீர் தொட்டி களுக்கு குடிநீர் நிரப்புவதற்கான ஏற் பாடுகளைத் தேசிய குடிநீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை மேற்கொண் டுள்ளது.

இந்தப் பகுதியில், கடந்த 2000 ஆம் ஆண்டு குடிநீர் விநியோகத்துக் கென 32 தொட்டிகள் நிறுவப்பட்டன.

இந்தத் தொட்டிகளுக்குக் குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாட்டை செய்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். இதற்கமைய யாழ். அரச அதிபர் கே.கணேஷ் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து 200 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்தத் தொட்டிகளுக்கு குடிநீர் புத்தூர் - நிலாவரை கிணற்றில் இருந்து விநியோகிக்கப்பட்டு வரு கிறது. அங்கிருந்து நிலத்துக்குக் கீழான நீர்விநியோக குழாய்கள் பொருத்தப்பட்டு நீர் விநியோகம் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட் டது.

அச்சுவேலிப் பகுதியில் நிர்மாணிக் கப்பட்ட 32 குடிநீர்த் தொட்டிகளில் முதற்கட்டமாக 16 தொட்டிகளுக்கு இந்த வாரம் முதல் குடிநீர் விநியோ கம் செய்யப்படவுள்ளது. ஏனையவற் றுக்கு குடிநீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தேசிய குடிநீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் யாழ்.பிராந்திய முகாமை யாளர் தி.பாரதிதாசன் தெரிவித்தார்.



சரசாலை பொது நூலகத்துக்கு ஒரு தொகுதி ஆன்மீகப் புத்தகங்களை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரம சுவாமிகள் சித்ரூபானந்தா - சாவகச்சேரி பிர தேசசபைச் செயலர் கு.பாலச்சந்திரனிடம் கையளிப்பதை யும், நூலகர் இ.தர்மலிங்கம் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (29)

## படையினர் மண் அகழ்வதால் நன்னீர் உவராகும் அபாயம்

யாழ்ப்பாணம் —

கடற்படையினர் காவல் அரண் களைப் பலப்படுத்துவதற்கு பாரிய ளவில் மண் அகழ்வதால் - கடல் நீர் கிணற்றுக்குள் புகுவதால், நன்னீர் உவர் நீராக மாற்றமடையும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

சுழிபுரம்,காட்டுப்புலம், பொன் னாலை,புளியந்துறை, சவுக்கடி, திரு வடிநிலை ஆகிய கரையோரப் பகுதி களிலேயே பாரியளவில் மண் அகழப் பட்டு காவல் அரண்களைப் பலப் படுத்திவருகின்றனர். இதேவேளை, இந்தப் பிரதேசங்களிலுள்ள பனை மரங்களையும் கடற்படையினர் தறித்து வருகின் றனர்.

அத்துடன், இந்தப் பிரதேசங்களில் புதிதாக காவலரண்களை அமைத்து வருவதுடன், காவலரண்களைப் பலப் படுத்தி வருகின்றமை மக்கள் மத்தி யில் பெரும் பயப்பீதியை ஏற்படுத்தி யிருக்கிறது.

இதேவேளை, அராலிப் பிரதேசத் திலுள்ள வயல் நிலங்களுக்குள் ஏற்கனவே கடல் நீர் உட்புகுந்ததால் - விவசாயச் செய்கைகளை மேற் கொள்ள முடியாமல் கைவிடப்பட் டமை குறிப்பிடத்தக்கது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### வேலைத் திட்டங்கள் விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்திலுள்ள 15 உள் ளூராட்சி மன்றங்களால் அங்கீகரிக் கப்பட்ட 2006 ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டங்கள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான அனுமதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சகல பிரதேச செய லாளர்களுக்கும் அனுப்பியுள்ளார்.

பிரமாண அடிப்படையிலான மூலதன வேலைத்திட்டம் குறித்து ஒதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி வேலைத்திட்டம் போன்ற வேலைத் திட்டங்களே ஆரம்பிக்கப்படவுள்ளன.

வீதி அபிவிருத்தி, மின் விநியோ கம், கட்டட அபிவிருத்தி, சனசமூக நிலைய அபிவிருத்தி, சிறுபாலங்கள் போன்ற அபிவிருத்தி என்பனவே இந்த வேலைத்திட்டத்தில் அடங்கு கின்றன.

### ஞானச்சுடர் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் —

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் ஆனிமாத ஞானச்சுடர் வெளியீட்டு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறும்.

இந்த நிகழ்வில் - ஆசிரியர் எஸ்.நவரத்தினராசா வெளியீட்டுரை யையும் விரிவுரையாளர் கே.சிவா னந்த மூர்த்தி மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

### மண்டலாபிஷேகம்

சாவகச்சேரி —

சாவகச்சேரி - பொன்னுச்சாமி வீதியில் அமைந்துள்ள ஞான வைர வர் ஆலய மண்டலாபிஷேகம் கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 12 நாட்கள் நடை பெறவுள்ள இந்த திருவிழாவின் இறுதித் திருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி மிகவும் சிறப்பாக நடைபெற வுள்ளது. விழாக் காலங்களில் அன்ன தான நிகழ்வும் நடைபெற்று வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

### தானியப் பயிர்கள் செய்கை

யாழ்ப்பாணம் —

வலி.மேற்கு பிரதேசத்தில் வெங் காயச் செய்கைக்கு ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்த சுழற்சி முறையில் தானிய வகை களைப் பயிரிடுமாறு விவசாயப் போத னாசிரியர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக தொல்புரம் கம நல சேவை நிலையத்தில் கடமை யாற்றும் விவசாயப் போதனாசிரியர் வி.செல்வநாயகம் தெரிவித்ததாவது-

வெங்காயச் செய்கையில் நோய்த் தாக்கம் அதிகரிப்பதனைத் தடுப் பதற்கு அந்த இடங்களில் தினை, குரக்கன் போன்றவற்றை சுழற்சி முறையில் செய்கை பண்ண வேண் டும். இந்தப் பயிர்ச் செய்கைக்கு ஜூன், ஜூலை மாதங்கள் ஏற்றவை என அவர் மேலும் தெரிவித்தார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : பி.தட்சயா
முகவரி : யாழ்ப்பாணம்.

அகவை நான்கு



பெயர் : இ.மிதுசன்
முகவரி : விசுவமடு.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :
கூப்பன்கள் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்



# வரலாற்றின் மூலம் பாடம் கற்காதவர்கள்

# உலகில் அழிந்து போனதே வரலாறு!

## தூயவன் அரசறிவியற் கல்லூரி அதிபர் அரசண்ணா

கிளிநொச்சி—

விடுதலை வேட்கை கொண்டு நிற்கும் ஓர் இனத்தின் மீது செலுத்தப்படும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் - எத்தகைய எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை உலக ஆக்கிரமிப்பாளர்களது வரலாறிலிருந்து கற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பாக, இரண்டாம் உலக யுத்தத்தில் கொடிகட்டிப் பறந்த ஹிட்லரின் நிலையிலிருந்து ஆக்கிரமிப்பாளர்கள் புரிந்து கொள்ளவேண்டுமென தூயவன் அரசறிவியற் கல்லூரி அதிபர் அரசண்ணா தெரிவித்தார்.

வட்டக்கச்சியில் நடைபெற்ற மக்கள் படைக்கட்டுமானப் பயிற்சி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

வரலாறு என்பது ஒரு மாபெரும் இயக்கம். இந்த உலகில் சதா தோன்றி, வாழ்ந்து, மறைந்து கொண்டே இருக்கும். அகப்பட்டுக் கொள்ளாத இயற்கையாலும் இந்த வரலாற்றுச் சக்கரம் அசைத்துச் செல்லப்படுகிறது. உலகின் மாபெரும் சக்தியான இந்த வரலாறு - தன்னிடமிருந்து பாடம் கற்காதவர்களை ஒரு போதும் மன்னிப்பதில்லை. அத்தகையவர்கள் அழித்தொழிக்கப்பட்டு விடுவதே வரலாறாகும்.

இன்று இலங்கைத் தீவிலுள்ள எல்லா இனங்களுமே இந்த வரலாற்றிடமிருந்து நிறையப் பாடங்களைக் கற்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதன்மூலம் தமது செய்நெறியைச் சரியாக வகுத்துக் கொண்டு அதன்வழி அவதானமாகச் செயற்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இல்லையேல், அவர்கள் வரலாற்றில் அழித்தொழித்து எங்கோ தொலைந்து விடுவார்கள்.

எமது இனத்தைப் பொறுத்த வரை அதற்கு மிக நீண்டதொரு வரலாறு உண்டு. உலகில் பெரும் சாம்ராஜ்ஜியங்களை உருவாக்கி ஆட்சி செய்த எமது வரலாறும் நீண்டது. அதுபோலவே அவை எல்லாவற்றையும் இழந்து அந்நியர்களிடம் அடிமையாக வாழ்ந்த வரலாறும் நீண்டது.

எமக்கிருக்கின்ற இந்த மிக நீண்ட வரலாற்றைத் தொகுத்து அறிய வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். ஏனெனில், அதன்மூலம் எமது இனம் தன்னைத்தானே சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அதன் மூலம் இந்த விடுதலைப் போராட்டத்தை மேலும் செழுமைப் படுத்தலாம்.

இவ்வாறுதான் உலக வரலாற்றிடமிருந்தும் எமக்கு நிறையப் படிப்பினைகள் இருக்கின்றன. இன்று உலகெங்கும் அடங்கி ஒடுங்கிப் போயிருக்கின்ற பழங்குடியினர் என இப்போது அழைக்கப்படுபவர்களது வரலாற்றிலிருந்தும், விடுதலைக்காக மிகநீண்ட போராட்டங்களை நடத்தி வென்றவர்களது வரலாற்றிலிருந்தும், அந்தப் போராட்டத்திலே தேங்கியிருப்பவர்களது வரலாற்றிலிருந்தும், தோற்றுப் போனவர்களது வரலாற்றிலிருந்தும் நாம் பாடம் கற்க வேண்டும்.

''வலியவர்கள் வாழ்வார்கள் மற்றெல்லோரும் அழிந்து விடுவார்கள்'' என்ற சாராம்சத்தை இத்தகைய வரலாறுகளிடமிருந்து நாம் பாடமாகக் கொள்ள முடியும்.

அதுபோலவே சிங்கள தேசத்துக்கும் வரலாற்று அன்னையிடமிருந்து நிறையச் செய்திகள் இருக்கின்றன. தடம்மாறிச் செல்லும் அந்த இனத்தின் பயணம் அவர்களைப் பாரிய அழிவுக்குள் வீழ்த்தப்போகிறது. விடுதலை வேட்கை கொண்டு நிற்கும் ஒரு இனத்தின் மீது செலுத்தப்படும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் எத்தகைய எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை உலக ஆக்கிரமிப்பாளர்களது வரலாறுகளிலிருந்து அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, இரண்டாம் உலக யுத்தத்தில் கொடிகட்டிப் பறந்த ஹிட்லரின் கதை இன்று அனைவரின் கண்களுக்கும் தெளிவாகத் தெரியும் ஒரு முன்னுதாரணமாகும். மொத்தத்தில் உலக வரலாறு பகரும் செய்தி என்னவெனில் - விடுதலைக்காக தர்மத்தின் பால் நின்று போராடுகின்ற ஒரு இனம் இறுதியிலும் இறுதியாய் வெற்றிபெறும் என்பதே.

ஆனால், அந்த வெற்றியைப் பெறுவதற்காக ஒவ்வொரு கடமைகளும் உரியகாலங்களில் செம்மையாக ஆற்றப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (09)

## சந்தைகளுக்கு அடிக்கல் நாட்டல்

பளை—

பளை பிரதேசத்தில் 16 லட்சம் ரூபா செலவில் இரண்டு சந்தைகளுக்கு புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பளை பொதுச்சந்தையில் ஒரு கட்டடமும், மற்றையது மாசாரிலும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த இரு கட்டடங்களுக்கான அடிக்கல்லை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் சிவஸ்ரீ அண்மையில் நாட்டினார்.

இந்த நிகழ்வுகளில் கிராம அலுவலர்கள், பிரதேச சபை செயலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள், வியாபாரிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

## அடிப்படை வசதிகள் இல்லாத மன்னார் வைத்தியசாலை

மன்னார்—

மன்னார் மத்திய வைத்தியசாலை அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கிவருகிறது.

இந்த வைத்தியசாலை திறக்கப்பட்டு சுமார் எட்டு மாத காலமாக அம்புலன்ஸ், நோயாளர் பார்வை விடுதி எனப் பல அடிப்படை வசதிகளற்ற நிலையில் பெரும் நெருக்கடிக்கு மத்தியில் இயங்கி வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

## சுதந்திரபுரம் படுகொலை 8 ஆம் ஆண்டு நினைவு

புதுக்குடியிருப்பு—

சுதந்திரபுரம் மனிதப்படுகொலையின் எட்டாம் ஆண்டு நினைவு நிகழ்வும், லெப்ரினன்ட் கேணல் அன்பு உட்பட்ட மாவீரர்களின் நினைவு நாள் நிகழ்வும் - நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி கலாசார மண்டபத்தில் வழங்கல் பகுதியைச் சேர்ந்த அன்ரனி ரனிஸ்லன் தலைமையில் உணர்பூர்வமாக நடைபெற்றது.

நிதித்துறை வழங்கல்பகுதியின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் - பொதுச்சுடரை இளவேனில் வாணிப பணிப்பாளர் யாழவன் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை சேரன் வாணிபப் பணிப்பாளர் இளம்பருதி ஏற்றினார். தொடர்ந்து லெப்ரினன்ட் கேணல் அன்புவின் திருவுருப்படத்துக்கு சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

இதையடுத்து சம்பவத்தில் வீரச்சாவடைந்த போராளிகள், நாட்டுப் பற்றாளர்கள், மக்கள் அனைவரினதும் திருவுருப்படங்களுக்கு சுடர் ஏற்றி, மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

தொடர்ந்து நவம் அறிவுக்கூட போராளிக் கலைஞர்களின் மாவீரர் நடனம் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து நினைவுரையை நிதித்துறையைச் சேர்ந்த பொற்கோ நிகழ்த்தினார்.

சிறப்புரையை தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. இதில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மீன் சந்தைக்கான கட்டடம் திறந்து வைப்பு

தாளையடி—

சுனாமியால் முற்றாகச் சேதமடைந்த உடுத்துறை மீன் சந்தை புதிதாக மீளமைக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கட்டடத்துக்கான நிதியுதவியை ஐ.நாவின் அபிவிருத்தித் திட்டம் வழங்கியிருந்தது. உடுத்துறை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.கணேஸ் தலைமையில் இந்தப் புதிய மீன் சந்தைக் கட்டடத் திறப்புவிழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில், தமிழீழ தேசியக் கொடியை வடமராட்சி மாவீரர் துயிலுமில்லப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றினார்.

சந்தைக்கான பெயர்ப்பலகையை உடுத்துறை கிராம அலுவலர் வ. தவராசா திரைநீக்கம் செய்து வைத்தார்.

சந்தைக் கட்டடத்தை வடமராட்சி கிழக்கு கடற்தொழில் பரிசோதகர் கணேசமூர்த்தி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

## தொண்டமான் நகர் மக்களுக்கு கட்டுமான பயிற்சிநெறி ஆரம்பம்

கிளிநொச்சி—

கிளிநொச்சி - தொண்டமான் நகரில் முதலாவது மக்கள் கட்டுமான அணிக்கான பயிற்சிநெறி ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தொண்டமான் நகர் பொது நோக்கு மண்டபம் முன்பாக உள்ள பொதுவிளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வுக்கு - ஊரக வளர்ச்சிப் பிரிவைச் சேர்ந்த போராளி ரகு தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை நாகர்கோவில் களமுனைத் தளபதி அமுதாப் ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தளபதிகளில் ஒருவராகிய கோபித் ஏற்றினார்.

நிகழ்வில் கருத்துரைகளை தளபதி கோபித், தளபதி அமுதாப் ஆகியோர் நிகழ்த்தினர்.

## படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை

### வினோநோதராதலிங்கம் எம்.பி தெரிவிப்பு

கிளிநொச்சி—

''தமிழ் மக்களுக்கு படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் எந்த விதமான பாதுகாப்பு உறுதிப்பாடும் கிடையாது என்பதையே வங்காலை தோமஸ்புரியில் இடம்பெற்ற படுகொலைகள் தெளிவுபடுத்துகின்றன'' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் தெரிவித்தார்.

வார்த்தைகளில் வர்ணிக்க முடியாத அளவுக்கு மிகவும் மிலேச்சத்தனமான, மிருகத்தனமான முறையில் இந்தப் படுகொலைகள் செய்யப்பட்டுள்ளன. கொலைவெறிகொண்ட இந்தச் செயற்பாட்டைப் பார்க்கும் போது தமிழ் மக்களுக்கு படையினரின் பகுதியில் எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது என்பதையே உணரமுடிகிறது.

மக்களுக்கு அச்சமூட்டுவதே இந்தப் படுகொலைகளின் நோக்கமாக இருக்ககூடும். கொலை நடந்த விதமும், கொல்லப்பட்டவர்கள் தூக்கில் தொங்கவிடப்பட்டிருந்ததும் இதனையே காட்டுகின்றன.

இந்தக் கொலைகளைப் படைத்தரப்பே செய்திருக்கிறது என்பதில் எந்தவிதமான சந்தேகங்களும் கிடையாது. கொலை செய்யப்பட முன்னர் மார்ட்டீன் குறித்து படையினர் அயலவர்களிடம் விசாரித்துள்ளனர். அத்துடன் இவர்களது வீட்டுக்கு மிகவும் அருகில் இராணுவ முகாம் உள்ளது.

கொலை நடந்த வீட்டு வளவினுள் படையினரின் சப்பாத்துக் காற்தடங்கள் இருந்துள்ளன. எனவே, படையினரை அறியாமல் இந்தச் சம்பவம் இடம்பெறவில்லை என்பது தெளிவு என அவர் மேலும் தெரிவித்தார்.

## முதல்கட்ட நிதியுதவி!

மன்னார்—

வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டத்தின் கீழ் - மன்னார் மாவட்டத்தில் வீடமைப்புக்கான முதற்கட்ட நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் மக்கள் வங்கி கிளையில் இந்த நிதியுதவிகளை வைப்பிலிடும் நிகழ்வு நடைபெற்றதாக மன்னார் மாவட்ட மீள் நிர்மாணத்திட்டத்தின் பிரதித்திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் 154 குடும்பங்களும், மன்னார் பிரதேச செயலர் பிரிவில் 123 குடும்பங்களும் பயனடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (01)

## இலவச கணினிப் பயிற்சி

பளை—

பளை பிரதேச மக்களுக்கு நடமாடும் இலவச கணினிப் பயிற்சி நெறிகள் பொருண்மிய மதியுரையகத்தால் நடத்தப்பட்டு வருகின்றன.

கணினிகள் பொருத்தப்பட்ட வாகனங்கள் கிராமம் கிராமமாகச் சென்று இந்தப் பயிற்சிநெறி வழங்கப்பட்டு வருகிறது.

கிராம ரீதியாக இவ்வாறான பயிற்சிகளை வழங்குவதால் அங்குள்ள மக்கள் பெரிதும் பயன் பெறக்கூடியதாகவுள்ளதாக பளைப் பிரதேச பொருண்மிய மதியுரையக இணைப்பாளர் மு.யோகராசா தெரிவித்தார்.

## முழங்காவில் பிரதேசத்திலிருந்து 115 பேர் போராட்டத்தில் இணைவு

முழங்காவில்—

முழங்காவில் பிரதேசத்தின் பல கிராமங்களில் தொடராக நடைபெற்று வரும் சமகால அரசியல் நிலவரம் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வுகளின் போது 115 பேர் போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

இவர்கள் கடந்த நான்காம் திகதி காலை 9.30 மணிக்கு முழங்காவில் பிரதேச அரசியல்துறை செயலகத்தில் தம்மை போராட்டத்தில் இணைத்துக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் முன்னாள் போராளிகளுக்கான கலந்துரையாடல் முழங்காவில் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் இடம்பெற்றது.

சிறப்புரையை மன்னார் மாவட்ட அடம்பன் கோட்ட தளபதிகளில் ஒருவரான லக்ஷ்மன், மன்னார் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவையின் பரப்புரைப் பொறுப்பாளர் து.சர்வன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

இதன்போது முன்னாள் போராளிகள் 62 பேர் மீளவும் போராட்டத்தில் இணைந்தனர். இது போன்றதொரு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நண்பகல் 2 மணிக்கு முழங்காவில் பிரதேச அரசியல்துறை செயலகத்தில், மன்னார் மாவட்ட பரப்புரை சிறப்புப் பொறுப்பாளர் இசைவாணன், அக்கராயன் குளம் பரப்புரை சிறப்பு பொறுப்பாளர் கானகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் 10 உறுப்பினர்கள் போராட்டத்தில் இணைந்தனர்.

இதுதவிர முழங்காவில் ராஜபுரம் கிராமத்தில் 20 பேர், வலைப்பாடு கிராமத்தில் 23 பேர் என மொத்தம் 115 பேர் தம்மை போராட்டத்தில் இணைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
ஒற்றும் உரைசான்ற நூலும் இவை இரண்டும்
தெற்றுஎன்க மன்னவன் கண்.

- திருக்குறள்

## நமது நோக்கு

# பயிரை மேயும் வேலிகள்!

"பாதுகாப்புக்கென நிறுத்தப்பட்டிருக்கும் படையினரே படுகொலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். பிறகெப்படி அவர்களிடம் போய் பாதுகாப்புக் கோரமுடியும்?" என - வங்காலைப் படுகொலைகளின் பின்னர் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை கேள்வி எழுப்பியிருக்கிறார்.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களின் படுகொலை களும் இராணுவ அட்டூழியங்களும் இப்போது அன்றாட வாழ்வாக மாறிவிட்டது. சீருடையினர் எதையும் செய்யலாம், யாரும் தட்டிக் கேட்க முடியாது என்ற நிலை உருவாகிவிட்டது.

மன்னார் ஆயரின் கருத்து இந்த நிலையைத் தெளிவாகவே பிரதிபலித்திருக்கிறது. பூனையைக் கிளிக்கு காவலுக்கு வைத்த கதை போலத்தான் வடக்கு-கிழக்கில் நிறுத்தப்பட்டிருக்கும் படையினரும்.

இந்த இலட்சணத்தில் யாழ்ப்பாண மக்களைப் பாதுகாப்பதற்காகத்தான் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் உயிரை இறைவன் காப்பாற்றியதாக மிகப் பெரிய "குண்டை" தூக்கிப் போட்டிருக்கிறார் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர்.

இராணுவத் தளபதியின் உயிர் காப்பாற்றப்பட்டது - அவர் யாழ்ப்பாண மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்கே என்று இவர் கூறியிருப்பது இந்த யுகத்தின் உச்சக்கட்ட நகைச்சுவையாகவே தெரிவு செய்யலாம்.

இராணுவத் தளபதியின் உயிர் காப்பாற்றப்பட்ட விவகாரம் ஒரு புறமிருக்க, அவர் காப்பாற்றப்பட்டதால் குடாநாட்டு மக்கள் பாதுகாக்கப்படுகிறார்கள் என்ற கருத்தை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

கடந்த டிசம்பர் மாதம் இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா பொறுப்பேற்றுக் கொண்டபின்பு வடக்கு-கிழக்கில் யுத்தநிலை தீவிரமடைந்ததை எவரும் மறுக்கமுடியாது.

அதுபோலவே இவர் குடாநாட்டு மக்களின் பாதுகாப்பு ரட்சகராக நடந்து கொண்டாரா என்பதை சர்வதேசமே அறியும் வண்ணம் இங்கு நிகழ்வுகள் நடந்தேறியிருக்கின்றன.

அல்லைப்பிட்டிப் படுகொலை, வரணியில் 8பேர் காணாமல் போனது, மானிப்பாய் படுகொலை, வாதரவத்தைப் படுகொலை, நெல்லியடிப் படுகொலை என்று குடாநாட்டு தமிழ் மக்கள் கொத்துக்கொத்தாக கொன்று போடப்பட்ட நிகழ்வுகள் இந்தக் காலத்தில் தான் நடந்தேறியிருக்கின்றன.

இதைவிட, ஏராளமான தனித்தனிப் படுகொலை கள், கைது செய்யப்படுதல், காணாமல் போதல், இராணுவ கெடுபிடிகள் அனைத்தையும் சரத் பொன்சேகாவின் பதவிக்காலத்தில் குடாநாட்டு மக்கள் அனுபவிப்பதை மறந்துவிட முடியாது.

இந்தச் சம்பவங்களுக்கும், இராணுவத் தளபதிக்கும் நேரடித் தொடர்பிருப்பதாக கூறாவிட்டாலும் ஒட்டு மொத்த இராணுவத்தையும் கட்டுப்படுத்தும் அவர் தானே இதற்குப் பொறுப்புக் கூறவேண்டும்.

எனவே, சரத் பொன்சேகாவை இறைவன் காப் பாற்றியது குடாநாட்டு மக்களைக் பாதுகாக்கவே என்ற எல்லாவெல மேதானந்த தேரரின் கருத்துக்கு, மன்னார் ஆயரின் மேற்சொன்ன கருத்தே பொருத்தமான பதிலாக இருக்கும்.

அதேவேளை, எல்லாவெல மேதானந்த தேரர் குடாநாட்டு மக்களை பாதுகாக்கவே இறைவன் இராணு வத் தளபதியை பாதுகாத்ததாக கூறிய கருத்து - இன்னுமொரு வகையிலும் நோக்கத் தக்கது.


இராணுவத் தளபதியின் உயிர் போயிருந்தால் குடாநாட்டு மக்கள் அழிவைச் சந்தித்திருப்பார்கள் என்ற எச்சரிக்கையாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

எது எப்படியோ - இராணுவத் தளபதியின் உயிரைப் பாதுகாப்பதன் மூலம் குடாநாட்டு மக்களைப் பாதுகாக்கலாம் என்று ஒருபோதும் இறைவன் தப்புக்கணக்குப் போடமாட்டான் என்பது மட்டும் உண்மை.

வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களைப் படுகொலை செய்யப்படுவது முதல் அடக்குமுறைகளை எதிர் கொள்வது வரை சர்வதேசத்துக்கு தெரியாவிட்டாலும் முக்காலும் உணர்ந்த இறைவனுக்குமா தெரியாமல் போயிருக்கும்?

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# ஈழப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு யுத்தமே புலிகள் முன்னுள்ள தெரிவு

## என்கிறார் பிரையன் செனிவிரட்ண

கொழும்பு

ஈழப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தற்போது விடுதலைப் புலிகளின் முன்னுள்ள தெரிவு யுத்தமே என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் உறவினரும், மருத்துவருமான பிரையன் செனிவிரட்ண தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

சமாதானப் பேச்சை ஆரம்பிக்குமாறு கோரும் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடை செய்ததன் மூலம் எதனைச் சாதிக்கப் போகிறது? இந்த தடையானது - ஐரோப்பிய ஒன்றியத்தின் முட்டாள்தனமான செயற்பாடாகும்.

விடுதலைப் புலிகள் மீதான தடை மூலம் அவர்களுக்கு வரும் நிதியை முடக்க முடிந்தது என்றால் வன்னியிலுள்ள மக்களைப் பராமரிப்பது யார்? இலங்கை அரசாங்கமா? இதுவரை அவர்கள் அதனைச் செய்யவில்லையே. எனவே, தமிழனும் தமிழனுக்கு உதவி செய்யக் கூடாது. நாமும் உதவி செய்ய மாட்டோம். உதவி செய்பவனையும் விடமாட்டோம். சாகவிடுங்கள் என்பதுதான் இந்தத் தடை மூலம் விடுக்கப்படும் செய்தியா? தடையால் புலிகளுக்கு ஆதரவு அதிகரித்து வருகிறது.

ஈழம் என்பது ஏற்றுக் கொள்ள முடியாது என்கிறது அமெரிக்கா. அதனை சொல்வதற்கு அவர்கள் யார்? வெளிநாடுகள் அரசுக்கு வழங்கும் ஆயுதங்களால்தான் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர். அது அந்த நாடுகளுக்குத் தெரியாமல் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## வாசகர் நோக்கு...

# வீதிப் பெயர்ப்பலகைகளைப் பாதுகாப்போம்!

தனியார் நிறுவனமொன்றின் பேருதவியுடன் யாழ். மாநகர சபையின் எல்லைக்குள் உள்ள வீதியின் பெயர்களை மும்மொழிகளிலும் அழகுற எழுதிய வீதிப் பெயர்ப்பலகைகளை அந்த வீதியின் இரு முனைகளிலும் யாழ். மாநகர சபையினர் நாட்டி வருகின்றமையென்பது பாராட்டுக்குரியதே! இன்னமும் பெயர்பலகைகள் நாட்டப்படாதுள்ள வீதிகளுக்கும் விரைவில் நாட்டப்படும் என்று நம்புவோமாக!!

இந்த வீதிப் பெயர்ப்பலகைகள் பலவற்றில் எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றமை பற்றிக் குறிப்பட வேண்டியுள்ளது! 'கிலநகர்ஒழுங்கை' என்றெழுதப் பட வேண்டியதை 'கின்கர் ஒழுங்கை' என்றெழுதப்பட்டிருப்பதை உதாரணத்துக்குக் குறிப்பிடலாம்! இப்படிப் பலவுள! செய்வன திருந்தச் செய் என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

கனகரத்தினம் வீதிப் பெயர்ப்பலகைக்கு அருகில் குப்பைகளைக் குவித்து வைத்து அதற்குத் தீ மூட்டிவிட்டார்கள். பெயர்பலகை சேதமடைந்து விட்டது. யாரை நோவது?

நாயன்மார் வீதிப் பெயர்ப்பலகையின் வர்ணம் முற்றாகச் சிதைந்து போய்விட்டதால் பலகைமட்டும் 'நீறில்லா நெற்றி போல்' நிற்கிறது. வர்ணம் சிதைந்ததா? சிதைக்கப்பட்டதா? என்பது அந்தப் பெயர்ப் பலகைக்கே வெளிச்சம்!

பழைய பூங்கா வீதியின் இரு முனைகளிலும் நாட்டப்பட்டுள்ள பெயர்ப்பலகைகள் வளைக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டுள்ளன. இவை யாரை என்ன கேட்டனவோ?

வேறு சில வீதிப் பெயர்ப்பலகைகளின் கம்பிவலையையும் ஊடறுத்து, வீதிப் பெயர்களைச் சுரண்டிச் சிதைத்திருப்பதனையும் காணலாம்! ஏனிந்தச் சுரண்டற் புத்தியோ யாரறிவார்?

இப்படிப் பல. இந்தப் பெயர்ப்பலகைகள் யாரை என்ன கேட்டனவோ? யாருக்கு என்ன துன்பம் செய்தனவோ? இவைகளை இப்படிச் சேதமாக்கியதால் சேதமாக்கியவர் என்ன பலனைக் கண்டனரோ? யார் தான் அறிவார்? யாருமே அறியார்?

மேலும் பல வீதிப் பெயர்ப்பலகைகளில் கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுப் பெயர் பலகைகளைச் சிதைத்துள்ளார்கள், முகமறியாதவர்கள்! இந்தப் பெயர்ப் பலகைகள், துண்டுப் பிரசுரங்கள் ஒட்டுவதற்காகவே நாட்டப்பட்டுள்ளன என்று அவர்கள் நினைத்துக் கொண்டுவிட்டார்கள் போலும்! அது தவறு என்பதனை இனிமேலாவது உணர்ந்து கொள்ளுவார்களாக!

மேலும் சில வீதித்திருப்பு முனைகளிலும் சில வீதிச் சந்திப்புக்களிலும் சிமெந்தால் கட்டப்பட்டு இடப் பெயர்களும் அந்த இடங்களுக்குச் செல்ல வேண்டிய தூரங்களையும் எழுதியுள்ளமையைக் காணலாம். இவற்றின் மேலும் துண்டுப் பிரசுரங்களை ஒட்டி, எழுதியவற்றினை மறைத்தும், சிதைத்தும் உள்ளதைக் காணலாம். இதன் தேவையை இனிமேலாவது சிந்திக்க வேண்டுகின்றேன்.!

இவ்வாறு சிதைக்கப்படும் பெயர்ப்பலகைகளைச் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாகத் திருத்தமாட்டார்கள். ஆனால், சிதைக்கப்படும் பெயர்ப்பலகைகள், சில காலத்தின் பின் ஆணிகள் கழன்று தொங்கும். சில காலத்தின் பின்பு தொங்கிய பலகை நிலத்தில் விழுந்து கிடக்கும். சில நாட்கள் கழிந்தபின் விழுந்துகிடந்த பெயர்ப்பலகை மாயமாக மறைந்து விடும். இந்தவிதமே நாட்டப்பட்டிருந்த இரும்புக் குழாய்களும் மர்மமாக மறைந்துவிடும். இதுவே வழமையாக இடம் பெறும் விடயமாகும். இப்படிச் செய்வதை யாராவது சாதனையாகக் கருதுவார்களானால் அந்தக் கருத்தை மாற்றிக்கொள்ளுவார்களாக!

பெரும்பாலான படித்தவர்கள் வாழும் நகரம் இது என்று பலராலும் கருதப்படுகின்ற - மதிக்கப்படுகின்ற இங்கு இவ்வாறான செயல்கள் எமது மதிப்பைக் குறைக்கும் செயல்களாகிவிடும் என்று நினைக்க மறந்து விடுகிறோமே என்பது விசனத்துக்கும், வியப்புக்குமுரியது.

சிதைக்கப்பட்டிருப்பது சாதாரண பெயர்ப்பலகைகள்தானே என்று நாம் எண்ணுகின்றோம். ஆனால், வெளியூர்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வருகின்றவர்கள் எமது பண்பாட்டை அளந்துகொள்ள இவைகளே அளவுகோலாக அமைகின்றன என்பதை சிந்திப்பதற்கு முற்றாக மறந்துவிடுகின்றோமே என்பதும் மனவருத்தத்துக்குரியது.


எனவே உள்ளூரிலிருக்கும் மக்களுக்கும் வெளியூர்களிலிருந்து வருகின்றவர்களின் தடுமாற்றங்களைத் தவிர்க்கப் பெரிதும் துணை புரிகின்றவை இந்த வீதி பெயர்ப் பலகைகளே என்பதையும், இவற்றைப் பாதுகாப்பது இந்த நகரவாழ் மக்களாகிய எமது தலையாய கடமை - பொறுப்பு என்பதையும் உணர்ந்து - தெளிந்துகொண்டு இன்று முதல் செயற்படுவோமாக!

யாழ். நகரை அழகுபடுத்தும் இலட்சியத்தில் இது முதற்படியாக அமைவதாக!

**எஸ். முருகையா**
**யாழ்ப்பாணம்.**

# ஈழத் தமிழரை ஏறெடுத்துப் பார்க்க தமிழகத்துக்கு நேரமில்லையா?

## விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தமிழக சட்ட மன்ற உறுப்பினர் ரவிக்குமாருடன் ஒரு நேர்காணல்.



**விடைகொடு எங்கள் நாடே!**
**கடல் வாசல் தெளிக்கும்வீடே!**
**பனை மரக்காடே!**
**பறவைகள் கூடே!**
**மறுமுறை ஒருமுறை**
**பார்ப்போமா?**

என்கிற ஏக்கம் வழிகிற வரிகளின் அர்த்தம் புரிந்து வருந்தாமல், அதன் இலக்கிய நயத்தை வியந்து கொண்டு இருக்கிறோம் தமிழர்களே!

வாழ்க்கையை தொலைத்து, வந்தேறிகளாக அவமானப்படுகிறவர் களின் மரணக்கூக்குரல் காற்றில் கலக்கிறது ஊமைப்பேரோசையாக!

மேற்கத்தேய இசை அலறும் கொண்டாட்டங்களிலும், பெருங்குரலெடுத்து இரையும் இயந்திரங்களின், வாகனங்களின் பரபரப்பிலும்,அகதிகளின் அவல விசும்பல்களையும், அழுகைச் சத்தங்களையும் காதுகொடுத்துக் கேட்க யாருக்கு இதயம் இருக்கிறது?

இரக்கம், கருணை, மனிதநேயம் போன்றவை யெல்லாம் கவிதை எழுது வதற்கும், அடுக்கு மொழியில் பேசுவதற்கும் மட்டுமே என ஒதுக்கி வைத்துவிட்டோம். நடிகைகளின் தற்கொலைகளுக்கு என்ன காரணம் என்று ஆராய நேரம் ஒதுக்க முடிகிறது. ஆனால்,

நடுக்கடலில் படகு கவிழ்ந்து இலங்கை அகதிகள் சாவு என்ற துயரம் பற்றி நினைக்க யாருக்கும் நேரம் இல்லையா?

சமீபத்தில் ஈழத்திலிருந்து தமிழகத்துக்கு அகதிகளை ஏற்றிக் கொண்டு வந்த படகு ஒன்று கடலில் மூழ்கியது. தாம் பிறந்த மண்ணை விட்டு, வாழ்ந்த வீட்டை துறந்து, உடமைகள் மறந்து தமிழ்நாட்டுக்குப் பயணப்பட்ட ஒரு தந்தையின் முன் பிணமாகக் கிடக்கிறார்கள் அவரின் குழந்தைகள். எந்தச் சோகத்திலும் தோள் சாய்த்து ஆறுதல் சொல்கிற மனைவி மூச்சிழந்து சரிந்து கிடக்கிறாள். அழுவதற்கு கண்ணீர் கூட மிச்சமில்லாமல் தேம்புகிற அந்தத் தமிழனை ஏறெடுத்துப் பார்ப்பதற்கும் தமிழகத்துக்கு நேரம் இல்லையா?

பத்தாயிரம் ரூபாவுக்கு மேல் தந்தால்தான் கள்ளத்தோணியில் ஏறி தமிழகம் வந்து அகதியாகமுடியும். அதற்கு வசதியில்லாமல்,அறுபது வயது மனைவி பிழைத்தால் போதும் என்று பணம் கட்டிய கணவனைப் பிரிய மனமின்றி, பாசப்போராட்டம் நடத்தியிருக்கிறார் ஒரு தமிழ்க்கிழவி. அந்த வயோதிப தம்பதியைக் குறைந்த பணத்தில் ஏற்றிக்கொண்ட ஒரு கள்ளத்தோணிக்கு இருக்கிற இரக்கமும், கருணையும்,அகதி முகாமில் இருக்கிற சீருடை அணிந்த அதிகாரிகளுக்கு இருப்பதில்லையே! அது ஏன்?

சிங்களச் சிப்பாய் களின் பாலியல் தாக்குதல்களுக்குப் பயந்து அகதிகளாக வந்த தமிழ்ப் பெண்களின் மானம் விலை பேசப்பட்டால் - தற்கொலை செய்து கொள்வதைத் தவிர,அவர்களால் வேறு என்ன செய்ய முடியும்? அந்தக் கொலைகளைப் பற்றி யார் விசாரிப்பது? 2000ஆம் ஆண்டில் மானத்தோடுகூடிய மறுவாழ்வு கிடைக்கும் என்று நம்பி தமிழகம் வந்த ஈழத்தமிழ்அகதிக்குடும்பம் ஒன்று விஷம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டது. தாலாட்டுக் கேட்க வேண்டிய ஆறுமாதக் குழந்த்த உட்பட இறந்து போனவர்களுக்கு ஒப்பாரிபாடக்கூட அந்தக் குடும்பத்தில் யாரும் மிச்சமில்லை.

நாங்கள் அகதிகள், இந்தியா வும் எங்களைக் கைவிட்டதால் மனம் உடைந்து தற்கொலை செய்து கொள்கிறோம்.எங்களின் இறுதி அடக்கச் செலவுக்கு இத் துடன் 3000 ரூபா வைத்திருக்கி றோம் என்று தீக்குளித்த நான்கு அகதிகள் எழுதிவைத்திருந்த கடிதத்தில் இருந்த எழுத்துக்களில் புரிந்தது நம் கருணை (!)

கடல் நடுவில் படகு மூழ்கி எதிர் நீச்சலில் கரையொதுங்கி உயிர் காப்பாற்றிக் கொண்டவர்களை, அரசின் உத்தரவு கிடைக்க வில்லை என்று கண்டுகொள்ளா மல் கடல் நடுவில் அலறவிட்ட போது - நம் தொப்புள்கொடி உறவில் ரத்தம் கசிந்தது.

சோதனை என்கிற பெயரில் பாலியல் வன்முறைக்கு சிறுமிகள் கூட விதிவிலக்கில்லாமல் சூறையாடப்பட்டபோது,இருபது நூற்றாண்டு தமிழ்ப் பாரம்பரியமும் சூறையாடப்பட்டது.

பேராசை பிடித்தவர்களின் நாடு பிடிக்கும் வெறியாட்டத்தில் அநாதையாகும் அகதிகளை அக்கறையுடன், மனித நேயத்தோடு அணுக வேண்டும் என்று ஐ.நா சபை 1951ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தம் போட்டது.அகதிகளின் மறுவாழ்வை உறுதி செய்யும் அந்த மனிதநேய ஒப்பந்தத்தில் - போர் அதிகம் நடைபெறும் தெற்காசிய நாடுகளில் பெரும்பாலானவை கையெழுத்துப் போடவில்லை.அதில் இந்தியாவும் அடங்கும்.

பங்களாதேஷ்,நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளில் இருந்துதான் அகதிகள் பெரும்பாலும் இந்தியாவுக்கு வருகிறார்கள். வடக்குத்திசை அகதிகள் பெரும்பாலும் பஞ்சம் போக்கவே அகதிகளாக வருகிறார்கள். ஆனால், இலங்கைத் தமிழர்கள் தங்களின் வாழ்வைத் தொலைத்துவிட்டு - தமிழகத்தின் தொப்புள்கொடி உறவை நம்பிப் படகில் புறப்படுகிறார்கள்.இலங்கைக் கப்பற் படையிடம் தப்பி, இந்தியக் கடலோரக் காவல் படையிடம் சிக்காமல் தமிழக எல்லைக்குள் உயிருடன் வந்தால்தான் அகதி என்கிற அந்தஸ்து கிடைக்கும். இல்லாமல் போனால்

அநாதைப்பிணம், தீவிரவாதி, கடற்புலி என்று ஏதோவொரு பட்டத்தைச்சூட்டி மரணத்தின் சுவடுகூட அழிக்கப்பட்டு விடும்.

அகதிகளின் மறுவாழ்வுக்கான சட்டபூர்வமான நடவடிக்கைகளை உலக நாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்கிற ஐ.நாவின் 1967ஆம் ஆண்டின் ஒப்பந்தத்திலும் இந்தியா ஏனோ கையெழுத்திடவில்லை. அந்த ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டால் உடன்படிக்கைளை சட்டபூர்வமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்கிறஅச்சத்தால் இன்றுவரை அகதிகளின் மறுவாழ்வில் மௌனம் சாதிக்கிறோம். அந்தச் சட்டமூல நிர்ப்பந்தம் இல்லாமல் போனதால்,எங்கிருந்தோ வருபவர்கள் எக்கேடு கெட்டால் நமக்கென்ன? என்று சுயநலத்தோடு நடந்து கொள்ள வசதியாக இருக்கிறது.

சின்னச்சின்ன நாடுகள் கூட அகதிகளின் அவலத்தைப்புரிந்து கொண்டு அவர்களை விருந்தினர்களாக நடத்துகிறார்கள். டென்மார்க், நோர்வே, கனடா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் என்ன வரலாற்றுத் தொடர்பு இருக்கிறது? ஆனாலும், அந்த நாடுகளுக்கு வாழ்வு தேடிப் போனவர்கள் மிகக் கண்ணியமாக நடத்தப்படுகிறார்கள். அரசியல் அதிகாரப் பகிர்வு வரை அவர்களுக்கு மனமுவந்து இடம் கொடுக்கின்றனர். ஐ.நா ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட மக்கள்.

நோர்வே நாடு இலங்கைக்குச் சென்று அமைதிப்பேச்சு நடத்தக்காரணம் - அங்கே அகதிகளாகப் போன தமிழர்கள் சர்வ வல்லமை படைத்தவர்களாக மாறியிருப்பதுதான். நோர்வேயில் வாக்குரிமை முதல் உயர்கல்வி வரை எந்தவித பாகுபாடும் இல்லாமல் சுயமரியாதையோடு தமிழர்கள் நடத்தப்படுகின்றனர். ஆனால், இரண்டாயிரம் வருட ரத்தத்தொடர்பு இருக்கும் தமிழகத்திலோ தமிழ் அகதிகளின் சுயமரியாதை கேலியாக்கப்படுகிறது.

தமிழ்... தமிழ் என்று சொல்லி ஆட்சிக்கட்டிலில் ஏறியவர்கள்கூட இலங்கைத்தமிழ் அகதிகளை ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. ஏனென்றால், அவர்களிடம் வாக்கு வங்கி கிடையாது. அவர்களால் இந்தத் தலைவர்களுக்கு ஆகப்போவது எதுவும் இல்லை.

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் நடைபெறும் போர் பற்றி யாருக்கும் எந்தவிதமான மாற்றுக்கருத்துக்களும் இருக்கலாம். புலிகளுக்கு ஆயுதப்பயிற்சி அளித்த போது ஒரு காரணம் சொல்லத் தெரிந்தவர்களுக்கு - தடை விதிக்கும் போது ஒரு காரணம் சொல்லக் கிடைக்காமலா போகும்? ஆனால், இனவெறியின் உச்சபட்சக் கொடுமைகளுக்கு உள்ளாகும் அப்பாவிகளை மனித நேயத்தோடு அணுகவேண்டும் என்பதில் மனிதர்களுக்குள் மாற்றுக்கருத்துக்கள் இருக்க வாய்ப்பில்லை.

போரின் காரணத்தால் மின்சாரம் தெரியாத ஒரு தலைமுறை இலங்கையில் வாழ்ந்து வருகிறது. வாழ்வதற்குரிய எந்த அடிப்படை வசதிகளும் இல்லாமல் ஒருநாள் விடுதலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் இன்னும் மனிதர்கள் வாழ்கிறார்கள். அதிலெல்லாம் கருத்துக் கேட்டால் உஷாராக அது அடுத்த நாட்டு உள் விவகாரம் என்று ஒதுங்கிக்கொள்ளலாம். ஆனால், சகோதர உணர்வோடு சுயமரியாதையான வாழ்க்கை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் தமிழகம் வரும் அகதிகளை மனிதர்களாக நடத்தாமல் போனால் அது நம்பிக்கை மோசடிதானே!

100 கோடியை தாண்டிய மக்கள் வாழும் ஒரு நாடு 60 ஆயிரத்துக்கும் குறைவாக இருக்கும் தமிழ் அகதிகளுக்கு நல்வாழ்வை உறுதி செய்வது பெரிய காரியம் இல்லை. அதற்கு மனமில்லை என்பதுதான் - இலங்கைத் தமிழ் அகதிகளின் அவலங்களுக்கு அடிப்படைக்காரணம்.

அகதி முகாம்களில், கீற்றுக்கொட்டகைகளில் கூட்டம் கூட்டமாக மந்தைகள் போல் அடைக்கப்படுகிறார்கள். மொத்த அகதிகளுக்கும் சேர்த்து நாம் செய்யும் செலவு 25 கோடிக்கும் குறைவுதான். இந்தியா முழுவதும் நடக்கும் அதிகார, அரசியல் கொள்ளைகளில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட அகதிகளின் நல்வாழ்வுக்கு செலவாகாது. அரசு ஒரு குடும்பத் தலைவருக்கு மாதம் 200 ரூபா உதவித்தொகையாக வழங்குகிறது . ஒரு மாதம் முழுக்க அந்தப் பணத்தில் எப்படி வாழமுடியும் என்று சிந்திக்க யாருக்கும் அவகாசம் இல்லை. குழந்தைகளாக இருந்தால் 45 ரூபா, 12 வயதுக்கு உட்பட்டவர்களாக இருந்தால் 90 ரூபா, பருவமடைந்தவர்களுக்கு 144 ரூபா என வயது அடிப்படை யில் மாதாந்த உதவித்தொகை அளிக்கப்படுகிறது. சுத்திகரிக்கப் பட்ட ஒரு லீற்றர் தண்ணீருக்கே பத்து ரூபா செலவழிக்க வேண்டிய காலகட்டத்தில் - 45 ரூபாவை வைத்துக்கொண்டு எப்படி குழந்தைகளுக்கு பாலூட்ட முடியும்?

ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளைக்கூடப் புரிந்து கொள்ளமுடியாத நாம்தான், விருந்தோம்பல் நாகரிகத்தின் தலைவர்கள் என்று இலக்கியங்களில் பெருமைபட்டுக் கொள்கிறோம். இலங்கைத் தமிழ் அகதிகளுக்காக 103 முகாம்கள் இருக்கின்றன. இதில் இரண்டு சிறப்பு முகாம்கள். இலங்கை இனக்கலவரத்துக்குப் பின்னர் இப்போது 50 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் அகதி முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர். குற்றம் செய்துவிட்டு சிறைக்குப் போகிறவர்களுக்குத் தருகின்ற மரியாதை கூட அப்பாவிகளான அகதிகளுக்கு கொடுக்கப்படுவதில்லை.



இத்தனை நாளுக்கொருமுறை கைதிகளை உறவினர்கள் பார்க்கலாம். அவர்கள் தங்குவதற்கு குறிப்பிட்ட அளவு இடவசதி இருக்கவேண்டும் என்று விதிகள் இருக்கின்றன. ஆனால், உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு சொந்தங்களை ஆளுக்கொரு திசையில் தொலைத்துவிட்டு முகாம்களில் அடைபடுகிற அகதிகளுக்கு ஆறுதல் சொல்ல யார் இருக்கிறார்கள்? திறந்த வெளிச் சிறைகளாக அகதி முகாம்கள் மாற்றப்பட்டு, அவர்களின் ஒவ்வொரு அசைவும் கண்காணிக்கப்படுகிறது. எதிரிகளிடம்கூட சில மணிநேரம் கண்ணியமான வாழ்க்கை கிடைத்துவிடும். அடைக்கலம் புகுந்த இடத்தில்தான் அவமானங்களால் ஆடை உரிக்கப்படுகிறார்கள். பாதிக்கப்பட்டவன் தமிழன் என்பதற்காக இரங்காவிட்டாலும், மனிதன் என்றாவது அக்கறை கொள்ள வேண்டாமா?மத்திய அரசு தருகிற அகதிகளுக்கான நிதிகளைக்கூட சரிவரப் பெற்றுத்தர, மாறிமாறி வந்த தமிழக அரசுகள் தயக்கம் காட்டின. இன்றுகூட அந்த நிலை மாறவில்லை. தன் சகோதரர்களின் நல்வாழ்வுக்கு உறுதியளிக்கும்படி அரசை நிர்பந்தப்படுத்த வேண்டியது நம்முடைய கடமை அல்லவா? டயானா இறந்த துயரத்துக்கு அஞ்சலிக் கவிதைகள் எழுதும் நம் தமிழினப் படைப்பாளிகள் - அடைக்கலம் தேடி வந்த தமிழர்களை நினைக்காமல் இருப்பதுதான் இன்னும் வேதனை. தங்களின் இரக்கத்துக்குச் சின்னதாக எதிர்ப்பு வந்தாலும், இரக்கப் படுவதைக்கூட நிறுத்திக்கொள்கிறார்கள் நம் கலைஞர்கள். எதுக்கு வம்பு என்று கூச்சப்படாமல் பதில் சொல்கிறார்கள். இன்னும் சிலர் அந்தப் பதில் தருவதற்குக்கூட அச்சப்பட்டு மௌனமாக இருந்துவிடுகிறார்கள். ஆயுதங்களைவிட ஆபத்தானது அந்த மௌனம்!


சுனாமி போன்ற பேரழிவுகள் மக்களின் வாழ்க்கை ஆதாரங்களை வாரிச் சுருட்டியபோது, தன்னிச்சையாக எழுந்த மனிதநேய உணர்வு நமக்கு அகதிகளிடமும் வர வேண்டும். அடைக்கலமாக நம்மிடம் வருபவர்களை மனித நேயத்தோடு நடத்தினால்தான் நாமெல்லாம் மனிதர்கள் என்று சொல்லிக் கொள்ளத் தகுதியான வர்களாவோம். தமிழர்களாக இருக்கிறோமோ இல்லையோ, குறைந்தபட்சம் மனிதர்களாக வேனும்இருப்போம்.

நன்றி:~ ஆனந்தவிகடன்

# தளபதி மகேந்தியின் இறுதி வணக்க நிகழ்விலிருந்து...



# ஷேவாக்கின் அதிரடி ஆட்டத்தில் இந்திய அணி 361 ஓட்டங்கள்!



சென் லூசியா——

இந்திய - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையே நேற்றுமுன் தினம் சென் லூசியா அரங்கில் ஆரம்பமான இரண்டாவது டெஸ்டில் முதலில் துடுப்பெடுத்தாடிவரும் இந்திய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 361 ஓட்டங்களைக் குவித்து வலுவான நிலையை எட்டியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

இதன்படி ஆரம்ப வீரர்களாக ஜபார் - ஷேவாக் ஜோடி களம்புகுந்தது.

இந்த இருவரும் ஆரம்பம் முதலே மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பந்துவீச்சாளர்களைத் தமது துடுப்புமட்டையால் திணறடிக்கவைத்தனர்.

தமது அதிரடி ஆட்டத்தின்மூலம் ஸ்கோரை கிடுகிடுவென எகிறவைத்த இந்த ஜோடியின் இணைப்பாட்டம் ஸ்கோர் 159 ஐத் தொட்டபோது முடிவுக்கு வந்தது.

சென்ற டெஸ்டில் இரட்டைச் சதமடித்துக் கலக்கிய ஜபார் 43 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கொலின்ஸின் பந்தை - பிராவோவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து லக்ஸ்மன் களமிறங்கி



னார். எனினும் ஓட்டமெதையும் பெறாத அவர் - கொலின்ஸின் பந்தை ரம்டீனிடம் பிடிகொடுத்து வந்தவேகத்திலேயே பவிலியன் திரும்பினார்.

மறுபுறத்தில் ஷேவாக் ஒருநாள் போட்டிபோல் அடித்தாடி சதத்தைக் கடந்தார்.


இதையடுத்து ராவிட் களமிறங்கினார். ராவிட் - ஷேவாக் ஜோடியின் இணைப்பாட்டத்தின்மூலம் இந்திய அணியின் ஸ்கோர் மளமளவென்று உயர்ந்தது.

ஸ்கோர் 300 ஐ எட்டும்வரை இந்த ஜோடியின் இணைப்பாட்டம் களத்தை ஆக்கிரமித்திருந்தது.

இந்த நிலையில் 190 பந்துகளை எதிர்கொண்ட ஷேவாக் 20 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 180 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார். இவரது விக்கெட்டையும் கொலின்ஸ் கைப்பற்றினார்.

அடுத்து யுவராஜ் களமிறங்கினார். எனினும், 2 ஓட்டங்களை மாத்திரமே அவரால் பெறமுடிந்தது. அவரது விக்கெட்டையும் கொலின்ஸ் விட்டுவைக்கவில்லை.

இதையடுத்து கைவ் களமிறங்கினார்.




ஆட்டநேர முடிவில் இந்திய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 361 ஓட்டங்களைப் பெற்றது.

களத்தில் ராவிட் 95, கைவ் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் கொலின்ஸ் 4 விக்கெட்டுக்களைப் ல்கைப்பற்றினார்.

# வடக்கு - கிழக்கு மாகாண அணி தெரிவு

யாழ்ப்பாணம்——

வடக்கு-கிழக்கு மாகாண துடுப்பாட்ட அணியைத் தெரிவுசெய்வதற்கான முதல் தொகுதி வீரர்களுக்கான பயிற்சி முகாம் தம்புள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் கடந்த மாதம் 22 முதல் 26 வரை ஐந்து நாட்கள் நடைபெற்றன.

மாகாண அணியைத் தெரிவு செய்வதற்காக இவ்வாறான பயிற்சி முகாம் ஒழுங்குபடுத்தப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண கிரிக்கெட் பயிற்றுனர் குமார் இராமநாதன் தலைமையில் நடைபெற்ற பயிற்சி முகாமில் -

இலங்கை தேசிய அணியின் வேகப்பந்து, களத்தடுப்பு உதவி பயிற்றுனர்கள், இலங்கை கிரிக்கெட் அக்கடமியின் தலைமை பயிற்றுனர் ஜெரோம் ஜெயரட்ண, பயிற்சியாளர்களின் முகாமை பயிற்றுனர் மல்கம் பெரேரோ ஆகியோர் கலந்து பயிற்சிகளை வழங்கினர்.

அத்தோடு சகலவிதமான பயிற்சிகளையும் பயிற்றுனர் குமார் இராமநாதன் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தினார்.

முதல் தொகுதியாக யாழ். மாவட்டத்திலிருந்து 15 பேரும், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 4 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 4 பேரும் கலந்துகொண்டனர்.

யாழ்.வீரர்களுக்கு பயிற்சியாளராக நிஷாந்தனும், கிளிநொச்சி வீரர்களுக்கு அல்ன்டீனும் பங்குபற்றினர்.

அத்துடன், இந்தப்பயிற்சி முகாமுக்கு அவதானிப்பாளர்களாக யாழ். பாடசாலை கிரிக்கெட் சங்க பிரதிநிதியாக அருட்சகோதரர் அன்ரனி பிரான்சிஸ், வடக்கு-கிழக்கு இளையோர் செயற்பாட்டு மையம் சார்பில் சண்முகலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இறுதி இரண்டு நாட்களும் புற்தரையில் நடைபெற்ற பயிற்சிப் போட்டியில் வீரர்கள் அடைந்த பெறுபேறுகள் பின்வருமாறு-

துடுப்பாட்டத்தில்-

எஸ்.வினோத்-100 ஆட்டமிழக்காமல் (யாழ்), வாஸ் டிலுக்ஷன்-68 (மட்டக்களப்பு), நேசவர்மன்-57 (யாழ்), ஜக்ஷன்-54 (யாழ்), பிரசாத்-54 (யாழ்), றொஷான்- 52 (20 பந்துகளில் - கிளிநொச்சி), விதுபாலா-48 (யாழ்), செந்தூரன்-46 (யாழ்).

பந்துவீச்சில்-

செந்தூரன் 52/4 (யாழ்), றெக்னோ 68/4 (யாழ்), வாஸ் டினுக்ஷன் 23/3 (யாழ்), ஜோன்சன் 51/3 (யாழ்), கொலின் 25/2 (யாழ்).

அடுத்த தொகுதியினருக்கான பயிற்சிமுகாம் எதிர்வரும் 16 ஆம் திகதிமுதல் 20 ஆம் திகதிவரை தம்புள்ளவில் நடைபெறவுள்ளது.

இந்த இரு பயிற்சி முகாம்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு -கிழக்கு மாகாண கிரிக்கெட் அணி தெரிவுசெய்யப்பட்டு ஜூலை மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ள மாகாணங்களுக்கிடையிலான சுற்றுப்போட்டியில் இந்த அணி கலந்துகொள்ளவிருக்கிறது.



உதைபந்தாட்டத்தில் யாழ்.மாவட்டத்தில் 17 வயதுப்பிரிவில் 1 ஆம் இடம்பெற்ற அருணோதயா கல்லூரி அணி வீரர்கள் வருமாறு:-

இடமிருந்து வலமாக முன்வரிசை வீரர்கள்- து.தனுசன், இ. ஜனிஸ்ரன், அமர்ந்திருப்பவர்கள்,பயிற்றுநர் க.தீபன், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் சி.சுபாஸ்கரன், கல்லூரி அதிபர் கி. மகேந்திரராஜா, அணிப் பொறுப்பாசிரியர் இ.பிரதாபசர்மா, பயிற்றுநர் பா.பிரதீபன், முன்வரிசையில் நிற்பவர்கள் - அணித்தலைவர் செ.கிருஷ்ணகுமார், சி.பத்மாகரன், க.கயானன், கோ.ஜனேசன், க.றஜீதன், உப தலைவர் நா. பிரசாத். பின்வரிசையில் நிற்பவவர்கள்- ஜெ.ஜிலித ராஜ், கு.முகுந்தன், வி.சதீஸ்வரன், த.தவகீத், க.சர்மிளன், மே. மாரியடேறன்ஸ், ச.சபேசன்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கண்காணிப்புக்குழுவுடன் எழிலன் சந்தித்துப் பேச்சு




திருகோணமலை —

திருகோணமலையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனுடன் தற்போதைய நிலைமைகள் குறித்து கலந்துரையாடினர்.

திருகோணமலை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரிகள் சம்பூரில் நேற்று மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள திருகோணமலை பகுதிகளில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படும் சம்பவங்கள் குறித்து எழிலன் கண்காணிப்புக்குழுவினரிடம் விளக்கமளித்தார். நேற்றுமுன்தினம் மூதூரில் நடந்த தமிழ்மக்கள் படுகொலை குறித்தும் அவர் கண்காணிப்புக் குழுவின் கவனத்துக்குக் கொண்டுசென்றார்.

அத்துடன், கிண்ணியாவில் படையினர் நேற்று பதுங்கித்தாக்கியதில் தமிழர் ஒருவரும் முஸ்லிம் ஒருவரும் கொலை செய்யப்பட்ட விடயத்தை பற்றியும் எடுத்துரைத்தார். இதன் போது தமிழ்மக்கள் கொல்லப்படுவது குறித்து கண்காணிப்புக் குழுவினர் கவலை தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (04)

# கிளைமோரில் காயமுற்ற மருத்துவ தாதி மரணம்!

கிளிநொச்சி —

கிளிநொச்சி-வன்னேரிக்குளத்தில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவித் தாக்கும் அணியினரின் கிளைமோர் தாக்குதலில் படுகாயமடைந்த மருத்துவத் தாதி சிகிச்சை பலனளிக்காது நேற்றுமுன்தினம் கிளிநொச்சி வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

இணுவிலைச் சொந்த இடமாகவும் தற்போது கிளிநொச்சி இரத்தினபுரத்தில் வசித்துவந்தவருமான பூவராசா சசிகலா (வயது 22) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த வியாழக்கிழமை மக்களுக்கான நடமாடும் மருத்துவசேவையை நடத்திவிட்டு வாகனத்தில் வந்துகொண்டிருந்தவேளை ஆனைவிழுந்தான் 9 ஆம் கட்டைப் பகுதியில் இராணுவ ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய தாக்குதலில் மருத்துவர் உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

இவர்கள் மூவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவேளை சிகிச்சை பலனளிக்காது சசிகலா நேற்றுமுன்தினம் உயிரிந்தார்.

இவரது புகழுடல் இரத்தினபுரத்திலுள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டு பின்னர் மக்களின் இறுதி அஞ்சலிக்காக தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணியகத்தில் வைக்கப்பட்டு பின்னர் திருநகர் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதேவேளை இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் நாட்டுப் பற்றாளர் கௌரவம் வழங்கியுள்ளனர்.

# சோதனைச் சாவடி 10 மணிவரை திறப்பு

கொழும்பு —

வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழாவை முன்னிட்டு இரண்டு நாட்களுக்கு முகமாலைச் சோதனைச் சாவடி இரவு 10 மணிவரை திறந்திருக்கும் என படைத்தலைமையகம் அறிவித்துள்ளது.

யாழ். அரச அதிபர் கே.கணேஸ் விடுத்த வேண்டுகோளை அடுத்து சோதனைச்சாவடிகள் திறக்கப்படும் நேரம் நீடிக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டது.

நேற்றிரவும், இன்றுஇரவுமே இரவு 10 மணிவரை சோதனைச் சாவடி திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிளைமோருடன் இளைஞர் கொடிகாமத்தில் கைதாம்!

யாழ்ப்பாணம் —

கொடிகாமம் பகுதியில் கிளைமோர் ஒன்றுடன் விடுதலைப்புலிகள் சந்தேக நபர் ஒருவரைத்தாம் கைது செய்துள்ளதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று காலை 10.30 மணியளவில் இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் பின்னர் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதேவேளை,நேற்று இராணுவத்தின் வாகனத் தொடரணியை இலக்குவைத்து பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் ஒன்று வரணியில் படையினர் மீட்டதாகவும் கூறப்படுகிறது.

நேற்றுக் காலை 8.40 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

# படுகொலைகளை...

இத்தகைய படுகொலைகள் தொடர்வதை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. இனிமேலும் எம்மால் பொறுத்துக்கொண்டிருக்கமுடியாது. எனவே, தாயகம் திரும்பியதும் இங்குள்ள நிலைமையை தலைமைப் பீடத்துக்கு எடுத்துக்கூறுவோம்.

இதுபற்றி ஆராய்ந்து தலைமைப் பீடம் விரைவில் தீர்க்கமான முடிவு எடுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகள் மீது விதித்துள்ள தடையை அடுத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் கட்டமைப்பில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நெருக்கடி நிலை ஏற்பட்டிருப்பதாக அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

ஒஸ்லோவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்த பின்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் கட்டமைப்பிலும், செயற்பாடுகளிலும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, ஆரம்பத்தில் நோர்டிக் நாடுகளைச் சேர்ந்தவர்கள் நடுநிலைமையும், இருதரப்பினரையும் சமத்துவமாகவும், சமநிலைமையாகவும் கண்காணிப்பு பணிகளைச் செய்வார்கள் என்ற நம்பிக்கையில்தான் நாங்கள் நோர்டிக் நாடுகளை தெரிவு செய்தோம்.

துரதிஷ்டவசமாக ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த முடிவின் காரணமாக நடுநிலைத் தன்மையும், அவர்களுடைய சமதரப்பு என்ற நிலைப்பாட்டிலும் பங்கம் ஏற்பட்ட காரணத்தால்-தற்போது கண்காணிப்புக் குழுவின் கட்டமைப்பில் ஒரு மாற்றத்தை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அவற்றை நாங்கள் நோர்வே தரப்புக்கு கூறியுள்ளோம்.

நோர்வே சிறிது கால அவகாசத்தை கேட்டுள்ளது. அதனை எங்கள் தலைமைப்பீடத்துக்கு அறிவித்துள்ளோம். விரைவில் மத்திய குழு கூடி இதற்கான தீர்மானத்தை எடுத்து நோர்வே அனுசரணையாளருக்கு தெரியப்படுத்தவுள்ளோம்.

கண்காணிப்புக் குழுவினரின் பாதுகாப்புத் தொடர்பாக முழுமையான அக்கறை கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு எந்தத் தீங்கும் வரக்கூடாது என்பதிலும், அவர்களின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களிலும் எப்போதுமே நாங்கள் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறோம்.

தொடர்ந்து கண்காணிப்புக்குழுவினரின் பாதுகாப்பு, அவர்களுடைய உண்மையான நடுநிலைமையான நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவது எங்களுடைய தொடச்சியான நிலைப்பாடாக இருக்கிறது. அதில் சந்தேகம் ஏற்படவேண்டிய அவசியம் எவருக்குமே இருக்கத் தேவையில்லை என அவர் தெரிவித்தார்.

## திருநெல்வேலி...

கொக்குவிலைச் சேர்ந்த எஸ்.விஜயகுமார் (வயது 40) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து திருநெல்வேலிச் சந்திப் பகுதியல பெரும் பதற்றம் நிலவியதோடு வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு பொதுமக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

அதேவேளை, இந்தச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் காயமுற்று பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## புதிய விமான...

கொமாண்டர் சிராந்த குணதிலக 1995 ஆம் ஆண்டு வடபகுதி விமானப்படைத் தளபதியாக இருந்தபோது-பலாலியில் சுட்டுவீழ்த்தப்பட்ட அவ்ரோ விமானத்தில் பயணம் செய்துகொண்டிருந்தபோது உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, கூட்டுப்படைகளின் தளபதியாக-எயர் சீப் மார்ஷல் டொனால்ட் பெரேரோவும் இன்று கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார்.

கூட்டுப்படைத்தளபதியாக இருந்த அட்மிரல் தயா சந்தகிரி- பாதுகாப்பு அமைச்சின் பிரதி செயலராக நியமிக்கப்பட்டதை அடுத்தே இந்த மாற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

அதேவேளை, விமானப்படையின் தலைமை அதிகாரியாக எயர் வைஸ் மார்ஷல் பாலசுந்தரம் பிறேமச்சந்திரா நியமிக்கப்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## படையினரின்...

மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் பயணம் செய்த இளைஞர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இவர் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் என படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்டவர் மீசாலையைச் சேர்ந்த ஆறுமுகம் ஜெகநாதன் (வயது - 24) என படையினர் தெரிவித்தனர்.

வவுனியா நீதிவான் இளஞ்செழியன் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

## பாலைப்பாணி...

விளாங்குளத்துக்கு தெற்காக 10 மைல் தொலைவில் ஏ-9 வீதிக்கு கிழக்காக பாலைப்பாணி பகுதி உள்ளமை குறிப்பிடத் தக்கது.

## சினைப்பர்...

இடம்பெற்ற தாக்குதலில் ஹீன் பலகே ஸ்ரீசூரியா குமார ரட்ண (வயது 36) என்ற இராணுவ சிப்பாயே கொல்லப்பட் டார்.

## விறகு...

என்பவர் படுகாயம் அடைந்த நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# எரிபொருள் விலைகள் நேற்று முதல் அதிகரிப்பு!

கொழும்பு —

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பெற்றோல் 5 ரூபாவாலும் மண்ணெண்ணெய் 3 ரூபாவாலும் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரலில் எரிபொருட்களின் விலைகள் 8 ரூபாவால் அதிகரிக்கப்பட்டன. அதன் பிறகு இந்த அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்தியன் ஓயில் நிறுவனத்துக்கு மானியத்தை அரசு வழங்காததால் யூலை 1 முதல் அந்த நிறுவனம் பெற்றோலிய விலைகளை உயர்த்தவுள்ளது.

அரசு மானியத்தை வழங்காததால் தான் இந்த விலை உயர்வு மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், இந்தியன் ஓயில் நிறுவனம் விலையை தீர்மானிப்பதை தவிர்ப்பதற்காக தாம் கலந்துரையாடுவதாக திறைசேரி பணிப்பாளர் டி.பி.ஜயசுந்தர தெரிவித்தார். (கு)

# தளபதி லெப்.கேணல்...

மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், தளபதி வீமன்,புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன், கொள்கை முன்னெடுப்புப்பிரிவு பொறுப்பாளர் இளங்கோ, யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பருதி, கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் உட்பட தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும் மாவீரரின் உறவினர்களும் மலர் மாலைகளை அணிவித்தனர்.

தொடர்ந்து நினைவுரையை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பருதி நிகழ்த்த, சிறப்புரையை தளபதி கேணல் ஜெயம் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் பங்கேற்று வணக்கம் செலுத்தினர்.

தளபதி கேணல் ஜெயம் நினைவுரை ஆற்றும் போது- லெப்.கேணல் மகேந்தி விடுதலைப் போராட்டத்தில் பல சாதனைகளை நிகழ்த்தியவர்.

யாழ்.குடாநாடு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பின் லெப்.கேணல் மகேந்தி தனியொருவராக யாழ். குடாநாட்டுக்கு ஊடுருவிச் சென்று எதிரியின் பிரதேசத்துக்குள் எதிரியை கலங்கடித்தவர். இதன் மூலம் ஏனைய போராளிகளுக்கு உத்வேகமளித்தவர். எதிரியை எந்த இடத்திலும் எதிர்கொண்டு கலங்கடித்தவர்.

மகேந்தியை போன்று நாம் ஒவ்வொருவரும் செயற்பட வேண்டும். மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்துவதுடன் நின்றுவிடாது நாம் எல்லோரும் விடுதலையை வென்றெடுக்க உத்வேகம் கொள்ளவேண்டும்.

எதிரியின் செயற்பாடுகள் எம்மை அழிக்கவேண்டும் என்பதில் வேகம் கொண்டுள்ளது. அதனை முறியடித்து விடுதலையை வென்றெடுக்கும் வகையில் எமதுமக்கள் அணி திரள்கின்றனர் என கேணல் ஜெயம் மேலும் அங்கு தெரிவித்தார்.

இதையடுத்து வித்துடல் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் வைக்கப்பட்டு இறுதி வணக்கக் கூட்டம் நடைபெற்றது.

போராளி பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இறுதி வணக்கக் கூட்டத்தில் பொதுச்சுடரை மாவீரரின் தந்தை ஏற்றினார்.

ஈகச்சுடரை ஏற்றி வித்துடலுக்கு மலர் மாலையை லெப்டினன்ட் கேணல் மகேந்தியின் துணைவியார் அணிவித்தார். அவரது சகோதரன் போராளி ரவியும் மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், தளபதி கேணல் பால்ராஜ், விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன், அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் தங்கன், போராளிகள், தளபதிகள்மலர் மாலை அணிவித்தனர். கருத்துரைகளை தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் கி.பாப்பா, விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன், கட்டளைத்தளபதி கேணல் பால்ராஜ் ஆகியோர் நிகழ்த்தினர்.

மகேந்தி தனியொரு மனித இராணுவமாக வாழ்ந்துள்ளார். தளபதி மகேந்தி என்ற பெரும் வீரனை, தளபதியை இழந்துவிட்டோம். நாம் போராளிகளை, மக்களை, குழந்தைகளை, சிறார்களை இழந்து கொண்டிருக்கிறோம்.

நாம் ஒரு கொடிய பாலை நிலத்தில் நடந்துகொண்டிருக்கிறோம். கொடிய வெளிக்குள் அகப்பட்டு அதிலிருந்து மீள்வதற்கு நாங்கள் விரைந்து நடந்து கொண்டிருக்கிறோம். நாம் கொடுக்கக்கூடிய கடைசி விலை என்பதால் நாம் அவதானமாக நடக்க வேண்டும் என்று பாலகுமாரன் தெரிவித்தார்.

தளபதி லெப்டினன்ட் கேணல் மகேந்தியின் இராணுவச் செயற்பாடுகளைப் பொறுத்தவரை நம்பிக்கை மிகுந்த நிறைந்த வீரன் என்று தளபதி கேணல் பால்ராஜ் தனது உரையில் தெரிவித்தார்.

தன்னுடன் நிற்கும் களப் போராளிகளுக்கு நம்பிக்கை மிகுந்தவர். தாக்குதல் என்றால் அங்கு மகேந்தி நிற்பார். முன்னணியில் நின்று தாக்குதல் நடத்தும் தளபதியாக அவர் விளங்கினார் என்றும் கேணல் பால்ராஜ் தெரிவித்தார்.

தொடர்ந்து அவரின் வித்துடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு கொண்டு செல்லப்பட்டு முழுமையான இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டது. தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், மக்கள் எனப் பெருமளவானோர் லெப்டினன்ட் கேணல் மகேந்தியின் இறுதி வணக்க நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.06.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.